# பெரம்பலூர் சர்க்கரை ஆலை

## (வரையறுக்கப்பட்டது)



## 48-ஆவது ஆண்டறிக்கை 2024-2025

# பிரிவு – 1

## பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)

பதிவு அலுவலகம்: ஆவின் இல்லம், 2வது தளம், 3A,
பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை, நந்தனம், சென்னை – **600 035.**

### 48–ஆவது வருடாந்திரப் பேரவைக் கூட்டம்

நுழைவுச் சீட்டு
(கூட்ட நுழைவு வாயிலில் கொடுக்கவும்)

கூட்ட நாள் : **25.09.2025** வியாழக்கிழமை — பதிவேட்டு எண்:

நேரம் : பிற்பகல் **3.00** மணி

இடம் : பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கம், பெரம்பலூர்

**பங்குதாரரின் பங்குகளின் எண்ணிக்கை :**

இப்பேரவைக் கூட்டத்திற்கு எனது வருகையை பதிவு செய்கிறேன்.

1. பங்குதாரர்
   பெயர் மற்றும் முழு முகவரி
   கைபேசி எண்

பங்குதாரர் கையொப்பம்

2. பதிலாள் பெயர் — பதிலாள் கையொப்பம்

**நுழைவுச் சீட்டு / பதிலாள் படிவம் பற்றிய குறிப்புகள்**

1. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி உடைய உறுப்பினர் தனக்கு பதிலாக கலந்து கொண்டு வாக்கு அளிக்க ஒருவரை நியமிக்கலாம்.

2. மேற்கூறிய பதிலாள் நிறுவனத்தின் பங்குதாரராக இருக்க வேண்டுமென்பதில்லை.

3. பூர்த்தி செய்யப்பட்ட பதிலாள் படிவம் கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரம் முன்னதாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. ஒரு நபர் அதிகபட்சம் 50 பங்குதாரர்களுக்கு மட்டுமே பதிலாளாக செயல்பட முடியும்.

5. பதிலாள் படிவத்தில் 3 பதிலாட்களின் பெயர்கள் குறிப்பிட்டிருந்தாலும், அம்மூவரில் ஒருவர் மட்டுமே கூட்டத்தில் பதிலாளாக கலந்துகொள்ள இயலும்.

6. பங்குதாரர் / பதிலாள் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும்போது நுழைவுச் சீட்டில் தங்களது பெயர், முகவரி, கைபேசி எண், பேரேட்டு எண், பங்குகளின் எண்ணிக்கை ஆகியவைகளை பூர்த்திசெய்து கொண்டுவர வேண்டும்.

# பதிலாள் படிவம்

நிறுவனத்தின் எண் : யூ 15520 டி என் 1976 எஸ்ஜிசி 007172

நிறுவனத்தின் பெயர் : பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)

பதிவு அலுவலகம் : ஆவின் இல்லம், 2வது தளம்,
3–ஏ, பசும்பொன் முத்துராமலிங் கனார் சாலை,
நந்தனம், சென்னை 600 035

| | |
|---|---|
| உறுப்பினர் பெயர் | : |
| முகவரி | : |
| மின்னஞ்சல் | : |
| (E-Mail ID) | : |
| கைபேசி எண் | : |
| பதிவேட்டு எண் | : |

மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனத்தில் ––––––––– (பங்குகள் எண்ணிக்கை) பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரராகிய நான் இதன் மூலம்

1. பெயர் :

   முகவரி :

   மின் அஞ்சல் :

   கைபேசி எண் :

   இவர் கூட்டத்திற்கு வர இயலவில்லையெனில்

2. பெயர் :

   முகவரி :

   மின் அஞ்சல் :

   கைபேசி எண் :

   இவர் கூட்டத்திற்கு வர இயலவில்லையெனில்

1. பெயர் :

முகவரி :

மின் அஞ்சல் :

கைபேசி எண் :

என்பவரை : **25.09.2025** அன்று வியாழக்கிழமை பிற்பகல் **3.00** மணி அளவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற இருக்கும் நிறுவனத்தின் **48**–ஆவது வருடாந்திரப் பேரவைக் கூட்டத்தில் எனக்குப் பதிலாக கலந்து கொண்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் மீது வாக்கு பதிவு செய்ய என்னுடைய பதிலாளாக மேற்கூறிய நபர்களை நியமனம் செய்கிறேன்.

**தீர்மானங்கள்**

1. தணிக்கை செய்யப்பட்ட **2024–25**–ஆம் ஆண்டின் வரவு செலவு கணக்குகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.

2. திரு. S. அருண்ராஜ் , இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களை இயக்குநராக நியமனம் செய்தல்

3. திருமதி. V. மாலதி, மா.வ.அ / பொது மேலாளர், தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் அவர்களை இயக்குநராக நியமனம் செய்தல்

4. டாக்டர் D. சசிக்குமார், கடலூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கரும்பு ஆராய்ச்சி மையத்தின் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர்அவர்களை சுயாதீன இயக்குநராக நியமனம் செய்தல்.

5. டாக்டர் R. கருப்பையன், கோயம்புத்தூர், கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தின் (ஐ.சி.ஏ.ஆர்) முதன்மை விஞ்ஞானி (தாவர இனப்பெருக்கம்) அவர்களை சுயாதீன இயக்குநராக நியமனம் செய்தல்.

| |
|---|
| **1** ரூபாய்<br>ரெவன்யூ<br>ஸ்டாம்ப் ஒட்டி<br>கையொப்பம்<br>இடவும் |

பங்குதாராின் கையொப்பம் :

பதிலாளர்களின் கையொப்பம் : 1.

2.

3.

# பெரம்பலூர் சர்க்கரை ஆலை
# (வரையறுக்கப்பட்டது)

**தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்**
திரு. T. அன்பழகன், இ.ஆ.ப.

**இயக்குநர்கள்**
திருமதி. N. மிருணாளினி, இ.ஆ.ப.
திரு.B. முருகேசன், இ.ஆ.ப.
திருமதி. V. மாலதி
திரு. V.K. அனந்தராமன்
திருமதி. T. ரமணிதேவி
திருமதி. V. மாலதி
Dr. D. சசிக்குமார்
Dr. R. கருப்பையன்

**நிறுவனச் செயலர்**

திரு. A. சங்கரலிங்கம்

**தலைமை கணக்கு அலுவலர்**

திரு. C. ஆறுமுகம்

**சட்டரீதியான தணிக்கையாளர்கள்**
திருவாளர்கள். எஸ். தசரதன் & கோ

**வங்கிகள்**
பாரத ஸ்டேட் வங்கி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

**பதிவு அலுவலகம்**
ஆவின் இல்லம், 2வது தளம்,
3–ஏ, பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை,
நந்தனம், சென்னை–600 035.

**அலகு**
பெரம்பலூர் சர்க்கரை ஆலை,
எறையூர், பெரம்பலூர் மாவட்டம் – 621 133.

**பொருளடக்கம்**


| பிரிவு 1 | | பக்கம் |
|---|---|---|
| 1. | நுழைவுச்சீட்டு | 1 |
| 2. | பதிலாள் படிவம் | 3 |
| 3. | பொருளடக்கம் | 5 |
| 4. | பங்குதாரர்களுக்கு அறிவிப்பு | 7 |
| 5. | இயக்குநர்களின் அறிக்கை | 12 |

| பிரிவு 2 | | |
|---|---|---|
| 1. | ஐந்தொகைக் குறிப்பு | 32 |
| 2. | இலாப நட்டக் கணக்கு | 33 |
| 3. | கணக்கின் மீதான குறிப்புகள் | 34 |
| 4. | பண நடமாட்டம் பற்றிய அறிக்கை | 62 |
| 5. | சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கை | 64 |
| 6. | இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரின் கருத்துரை | 88 |


தணிக்கைக் குழு

திரு. V.K. அனந்தராமன்

Dr. D. சசிக்குமார்

Dr. R. கருப்பையன்

குறிப்பு

**48–**ஆவது ஆண்டறிக்கையில் கண்டுள்ள பேரவைக் கூட்ட அறிவிப்பு, இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகள், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள், இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் முதன்மை தணிக்கைத் தலைவரின் கருத்துரை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகள் ஆகியவைகளின் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில படிவத்தின் தமிழாக்கம் ஆகும்.

# பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரையறுக்கப்பட்டது)

பதிவு அலுவலகம், ஆவின் இல்லம், 2வது தளம், 3A, பசும்பொன் முத்துராமலிங்கனார் சாலை,
நந்தனம், சென்னை – 600 035.

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் 48–வது வருடாந்திரப் பேரவைக் கூட்டம், 2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி, வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என இந்த நோட்டீஸ் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**சாதாரணப் பணிகள்**

1. 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாளன்று உள்ளபடியான, நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட தனி ஐந்தொகைக் குறிப்பு, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் இலாப நட்டக் கணக்குகள், அவற்றின் மீதான இயக்குநர்களின் அறிக்கை, தணிக்கையாளர்களின் அறிக்கை, ஆகியவற்றைப் பெற்று, பரிசீலனை செய்து, நடைமுறைப்படுத்துதல்.

2. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   திரு. S. அருண்ராஜ் , இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.

3. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   திருமதி. V. மாலதி, மா.வ.அ / பொது மேலாளர், தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.

4. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   டாக்டர் D. சசிக்குமார், கடலூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கரும்பு ஆராய்ச்சி மையத்தின் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள் இந்நிறுவனத்தின் சுயாதீன இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.

5. கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பரிசீலனை செய்து தகுதி உடையதெனக் கருதினால், அவ்வாறாகவோ அல்லது மாற்றங்களுடனோ, சாதாரணத் தீர்மானமாக நிறைவேற்றுதல்:

   டாக்டர் R. கருப்பையன், கோயம்புத்தூர், கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தின் (ஐ.சி.ஏ.ஆர்) முதன்மை விஞ்ஞானி (தாவர இனப்பெருக்கம்) அவர்கள் இந்நிறுவனத்தின் சுயாதீன இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.

(இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி)

இடம் : சென்னை
நாள் : 18.08.2025

**த.அன்பழகன், இ.ஆ.ப**
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்

# குறிப்புகள்

1. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி பெற்ற அங்கத்தினர் தனக்கு பதிலாக வாக்களிக்கும் பொருட்டு வேறொருவரை நியமிக்க உரிமையுண்டு. அவ்வாறு நியமிக்கப்படுபவர் நிறுவனத்தின் அங்கத்தினராக இருக்க வேண்டுமென்பதில்லை.

2. பதிலாள் உரியமுறையில் செயல்படுவதற்கு, பதிலாள் படிவத்தை பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு, இப்பேரவைக் கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக, இந்நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 102–க்கு இணங்க, இனம் எண் 2 முதல் 5 வரை எண்ணுள்ள சிறப்புப் பணிகள் பற்றிய விளக்க அறிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

4. 11.09.25 முதல் 25.09.2025 வரை (இவ்விரு நாட்களும் உட்பட) நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடுகளும் மற்றும் பங்கு மாற்றுப் புத்தகங்கள் மூடப்பட்டிருக்கும்.

5. பங்குதாரர்கள் 48 ஆவது ஆண்டறிக்கையின் மீது தாங்கள் தெரிந்து கொள்ள விரும்பும் விவரங்கள் குறித்து வினாக்களை வருடாந்திரக் கூட்டத்திற்கு 7 நாட்கள் முன்னதாக பதிவு அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினால், தேவைப்படும் தகவல்களை சேகரித்து கூட்டத்தில் உரிய பதில்கள் அளிக்க ஏதுவாக இருக்கும்.

6. பங்குதாரர்கள் தங்கள் முகவரியில் ஏதேனும் மாற்றம் இருந்தால், உடனே இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. பங்குதாரர் / பதிலாள் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும்போது இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நுழைவுச் சீட்டை, பூர்த்தி செய்து கொண்டு வரவேண்டும்.

8. பங்குதாரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்போது 48 ஆவது ஆண்டு அறிக்கையை எடுத்து வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9. பங்குதாரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குச் சான்றிதழ்களை வெவ்வேறு பதிவேட்டு எண்களில் பெற்றிருக்கும் பட்சத்தில் மேற்படி பதிவேட்டு எண்களை ஒருங்கிணைக்க விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. துவக்கக் காலத்தில் பல பங்குதாரர்கள் தங்களது முகவரியை முழுமையாக தரவில்லை. எனவே ஆண்டறிக்கை அவர்களுக்கு சரிவர சென்று அடைவதில்லை அல்லது காலதாமதமாக சென்று அடைகிற நிலை உள்ளது. எனவே, அவ்வாறு முழுமையான முகவரி தராதவர்கள் கதவு எண், தெருவின் பெயர்,கிராமத்தின் / ஊரின் பெயர், மாவட்டத்தின் பெயர், அஞ்சலக அடையாள எண், கைபேசி எண் உள்ளிட்ட முழுமையான முகவரியை பேரேட்டு எண்ணுடன் அஞ்சல் அட்டை மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**11.** நிகழ்ச்சி நடைபெறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கின் வரைப்படம்.



## விளக்க அறிக்கை

(2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 102 –ன்படி)

**இனம் எண்: 2**

திரு. S. அருண்ராஜ், இ.ஆ.ப, ஆட்சியர், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் தமிழ்நாடு அரசால் 23.06.2025 தேதியிட்ட பொது (சிறப்பு–அ) துறையின் அரசாணை (Rt) எண். 2367–ன் படி, திருமதி. திருமதி. கிரேஸ் லால்ரிண்டிகி பச்சுவா., அவர்கள் பணியிடமாற்றத்தில் சென்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாடு அரசின் நிலையாணைப்படி (Ms) எண்.02, தொழில் (எம்.ஐ.சி.2) துறை, நாள். 06.01.2022– ன் மூலம் பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் சில அதிகாரிகளை இயக்குநர்களாக நியமித்து ஒரு நிலையாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய நிலையாணைப்படி, பெரம்பலூர் மாவட்டத்தின் ஆட்சியராக பதவியில் உள்ளவரை பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் இயக்குநராக நியமிக்கப்படுவார். 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் பிரிவு 161–ன்படி, 21.08.2025 அன்று நடைபெற்ற 224–வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்ட திரு. S. அருண்ராஜ், இ.ஆ.ப அவர்கள் இந்நிறுவனத்தின் நலனுக்காக இயக்குநராக நியமிப்பது அவசியம் என இயக்குநர்கள் குழு கருதுவதால், இவரை அவ்வாறு நியமனம் செய்வதற்கு பரிந்துரை செய்கிறது. இத்தீர்மானம் திரு. S. அருண்ராஜ், இ.ஆ.ப அவர்கள் சம்மந்தப்பட்டதால், இத்தீர்மானத்தில் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநருக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

**இனம் எண்: 3**

திருமதி. V. மாலதி, அவர்கள் தமிழ்நாடு அரசால் 04.03.2025 தேதியிட்ட பொது (சிறப்பு–அ) துறையின் அரசாணை (Rt) எண். 876–ன்படி, திருமதி. ஐ. மகாலட்சுமி அவர்கள் பணியிடமாற்றத்தில் சென்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தில் தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் மா.வ.அ / பொது மேலாளர் ஆக நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாடு அரசின் நிலையாணைப்படி (Ms) எண்.2, தொழில் (எம்.ஐ.சி.2) துறை, நாள். 06.01.2022–ன் மூலம் பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் சில அதிகாரிகளை இயக்குநர்களாக நியமித்து ஒரு நிலையாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய நிலையாணைப்படி, தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் மா.வ.அ / பொது மேலாளர் ஆக நியமிக்கப்படுபவர், பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் இயக்குநராக நியமிக்கப்படுவார். 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் பிரிவு 161–ன்படி 04.06.2025 அன்று நடைபெற்ற 223–வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்ட திருமதி. V. மாலதி, அவர்கள் இந்நிறுவனத்தின் நலனுக்காக இயக்குநராக நியமிப்பது அவசியம் என இயக்குநர்கள் குழு கருதுவதால், இவரை அவ்வாறு நியமனம் செய்வதற்கு பரிந்துரை செய்கிறது. இத்தீர்மானம் திருமதி. V. மாலதி, அவர்கள் சம்மந்தப்பட்டதால், இத்தீர்மானத்தில் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநருக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

**இனம் எண்: 4**

தமிழ்நாடு அரசால் G.O.(D) எண். 189 வேளாண்மை – உழவர் நலத்துறை (SA2) துறை நாள் 03.06.2025 அரசாணையில், கடலூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் கரும்பு ஆராய்ச்சி மையம். வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் D. சசிக்குமார் அவர்கள் இயக்குநர் குழுவில் ஒரு சுயாதீன இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி, 04.06.2025 அன்று நடைபெற்ற 223வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் சுயாதீன இயக்குநராக நியமனம் செய்யப்பட்டதை கவனத்தில் கொண்டு பதிவு செய்துள்ளது. அதனை அங்கீகரிக்கும் இத்தீர்மானம் டாக்டர் D.சசிக்குமார் அவர்கள் சம்மந்தப்பட்டதால், இத்தீர்மானத்தில் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநருக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

**இனம் எண்: 5**

தமிழ்நாடு அரசால் G.O.(D) எண். 189 வேளாண்மை – உழவர் நலத்துறை (SA2) துறை நாள் 03.06.2025 அரசாணையில், கோயம்புத்தூர் கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தின் (ஐ.சி.ஏ.ஆர்) முதன்மை விஞ்ஞானி (தாவர இனப்பெருக்கம்) டாக்டர். R. கருப்பையன் அவர்கள் இயக்குநர் குழுவில் ஒரு சுயாதீன இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி, 04.06.2025 அன்று நடைபெற்ற 223வது இயக்குநர்கள் குழு கூட்டத்தில் சுயாதீன இயக்குநராக நியமனம் செய்யப்பட்டதை கவனத்தில் கொண்டு பதிவு செய்துள்ளது. இத்தீர்மானம் டாக்டர். R. கருப்பையன், அவர்கள் சம்மந்தப்பட்டதால், அதனை அங்கீகரிக்கும் இத்தீர்மானம் அவருக்கு ஆர்வமுண்டு.

இத்தீர்மானத்தில், வேறு எந்த இயக்குநருக்கும், முக்கிய அதிகாரிகளுக்கும் ஆர்வம் இல்லை.

(இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி)

இடம் : சென்னை
நாள் : 18.08.2025

**த.அன்பழகன். இ.ஆ.ப**
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்

# பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)
# இயக்குநர்களின் அறிக்கை

பெறுநர்
பங்குதாரர்கள்
பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)

அன்புடையீர்,

உங்கள் இயக்குநர்கள் இந்நிறுவனத்தின் நாற்பத்தி எட்டாவது ஆண்டு அறிக்கையையும் அத்துடன் **31.3.2025** ஆம் தேதிப்படியான தனி ஐந்தொகை லாப நட்டக்கணக்கு, **31.3.2025** அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தனி இலாப நட்டக் கணக்கு, அவற்றின் மீதான தணிக்கையாளர்களின் அறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிக்கிறார்கள்.

**1. ஆலையின் செயல்திறன்:**

இந்நிறுவனத்தின் அலகு ஆலையான பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் **2024–2025** ஆம் ஆண்டின் செயல்திறன் **2023–2024** ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுவிவரங்கள்கீழேகொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | விவரங்கள் | 2024–2025 | 2023–2024 |
|---|---|---|---|
| 1. | கரும்பு அரைத்தது (மெ.டன்) சர்க்கரை | 1,64,975 | 3,28,966 |
| 2. | உற்பத்தி (குவிண்டால்) அரவைத் திறன் | 1,40,812 | 3,02,337 |
| 3. | பயனீட்டளவு (சதவீதம்) சராசரி | 31.97 | 63.75 |
| 4. | சர்க்கரைச் சத்து (சதவீதம்) சர்க்கரை | 10.35 | 10.55 |
| 5. | கட்டுமானம் (சதவீதம்) | 8.54 | 8.74 |
| 6. | மொத்த இழப்பு (சதவீதம்) | 1.83 | 1.85 |

**2. நிதி செயல்திறன்:**

**31.3.2025** ஆம் தேதியுடன் முடிவடைந்த காலத்திற்கான நிறுவனத்தின் நிதிப்பயன்பாடு **31.3.2024** ஆம் தேதியுடன் ஒப்பிடுகையில் கீழ்க்கண்டவாறு உள்ளன.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 31.3.2025 | 31.3.2024 |
|---|---|---|---|
| i | இயக்கம் மூலம் வருவாய் | 9,363.27 | 14,490.42 |
| ii | இதர வரவினங்கள் | 136.27 | 219.43 |
| iii | மொத்த வரவு | 9,499.54 | 14,709.85 |
| iv | கழிக்க: விற்பனையின்அடக்க விலை | 9,918.45 | 13,968.39 |
| v | வட்டி மற்றும் தேய்மானத்திற்கு முன் ஈட்டியது | (–)418.91 | 741.46 |
| vi | வட்டி | 2,175.33 | 2,496.51 |
| vii | தேய்மானத்திற்கு முன் ஈட்டியது | (–)2,594.24 | (–)1,745.05 |
| viii | தேய்மானம் | 61.67 | 59.22 |
| ix | நடப்பாண்டிற்கு இலாபம் / நட்டம் | (–)2,655.91 | (–)1,804.27 |

| வ. எண் | விவரங்கள் | 31.3.2025 | 31.3.2024 |
|---|---|---|---|
| x | முந்தைய ஆண்டுக்கு சரிசெய்யப்பட்டது (நிகரம்) | (–)203.34 | (–)744.11 |
| xi | முந்தைய ஆண்டுக்கு சரிசெய்யப்பட்ட பின்னர் இலாபம் / நட்டம் | (–)2,859.25 | (–)1,060.16 |
| xii | முந்தைய ஆண்டிலிருந்து கொணரப்பட்ட திரண்ட நட்டம் | (–)33,004.25 | (–)31,944.08 |
| xiii | ஐந்தொகைக் குறிப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்ட குவிந்த நட்டம் | (–)35,863.54 | (–)33,004.25 |

**3. நிகர மதிப்பு:**

31.03.2025 ன்படி நிறுவனத்தின் நிகர மதிப்பு ரூ. (–) 14,952.71 இலட்சங்களாகும்.

**4. அகநிதிவள உருவாக்கம்:**

மார்ச் 31 உடன் முடிவடைந்த மூன்று ஆண்டுகளில் நிறுவனத்தின் உள் நிதிவள உருவாக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| விவரங்கள் | ஆண்டுகள் | | |
|---|---|---|---|
| | 31–3–2025 முடிய | 31–3–2024 முடிய | 31–3–2023 முடிய |
| அ. இலாபம் / நட்டம் | (–)2,859.25 | (–)1,060.17 | 2,551.20 |
| ஆ. தேய்மானம் | 61.67 | 59.22 | 64.80 |
| இ. ரொக்க நட்டம் (அ–ஆ) | 2797.58 | 1,000.95 | 2,486.40 |

**5. பங்கு ஆதாயத் தொகை**

நிறுவனத்தின் திரண்ட இழப்பு காரணமாக இந்த ஆண்டிற்கு எவ்வித பங்கு ஆதாயத் தொகையும் உங்கள் இயக்குநர்கள் சிபாரிசு செய்ய இயலாத நிலையில் உள்ளனர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

**6. கோரப்படாத பங்கு ஆதாயத் தொகையை முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு மாற்றம்செய்தல்:**

இந்நிறுவனம் கடந்த ஆண்டுகளில் பங்கு ஆதாயத் தொகை எதுவும் வழங்கவில்லை. அதனால் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டம் பிரிவு 125(2) இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

**7. நிதி ஆண்டில் நிறுவனத்தை பாதிக்கும் பொருள் மாற்றங்கள் தணிக்கை ஆண்டில் நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க பொருள் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.**

**8. நிறுவனத்தின் சமூக பொறுப்புகள்:**

இந்நிறுவன இயக்குநர்களின் குழுவானது நிறுவன சமூக பொறுப்புகளுக்கான குழு ஒன்றினை அமைத்துள்ளது. ஆயினும், நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவருவதால் தணிக்கை ஆண்டில்நிறுவன சமூக பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பான நடவடிக்கை ஏதும் செய்ய இயலவில்லை.

**9. கடன்கள், பொறுப்புறுதிகள் அல்லது முதலீடுகள் பற்றிய விவரங்கள்:**

இத்தணிக்கையாண்டில் 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் பிரிவு 186–ல் குறிப்பிட்டவாறு கடன்கள், பொறுப்புறுதிகள் அல்லது முதலீடுகள் ஆகிய எதுவும் செய்யப்படவில்லை.

**10. நிறுவனத்துடன் தொடர்புடைய நபர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் அல்லது ஏற்பாடுகள்:**

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் பிரிவு 188–ல் வரையறுத்ததன்படி தொடர்புடைய நபர்களின் ஒப்பந்தங்கள் அல்லது ஏற்பாடுகள் குறித்த விவரம் கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**11. நிறுவனத்தின் செயலக தணிக்கை:**

நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 209.11 கோடி, 2013 நிறுவனங்கள் சட்டம் பிரிவு 204 இன் கீழ் செயலக தணிக்கை கட்டாயமாகும். அதன்படி, இவ்வாண்டில் செயலகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நிறுவனச் செயலர் பயிற்சி அறிக்கை (படிவம் எண்.MR–3) இணைக்கப்பட்டுள்ளது.

**12. தணிக்கையாளர்களின் அறிக்கை மீதான தகுதியுடைய விளக்கங்கள், குறிப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்:**

சட்டபூர்வ தணிக்கையாளர்களின் தகுதிகள் பற்றிய விளக்கம் கூடுதல் சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**13. வருடாந்திர அறிக்கையின் சுருக்கம்:**

2014–ஆம் ஆண்டு நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி எண் 12 உடன் படிக்கப்படும் பிரிவு 92–ன்படி, வருடாந்திர சுருக்கமான சாராம்சம் (MGT–9 படிவம்) இந்த அறிக்கையில் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

**14. நடத்தப்பட்ட இயக்குநர்கள் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை:**

இந்த நிதியாண்டில் இந்நிறுவனமானது நான்கு முறை (07.05.2024, 22.08.2024, 22.10.2024 மற்றும் 13.02.2025) இயக்குநர்கள் குழுக் கூட்டத்தை நடத்தியுள்ளது.

**15. தணிக்கை அறிக்கைகள்:**

i) சட்டரீதியான தணிக்கை

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 139 (5)–ன்படி இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரின் அறிவுரையின் பேரில் திருவாளர்கள் திருவாளர்கள். எஸ். தசரதன் & கோ, திருச்சி, இந்நிறுவனத்தின் சட்டரீதியான தணிக்கையாளர்களாக இந்த ஆண்டிற்காக இந்திய அரசால் மறுநியமனம் செய்யப்பட்டார்கள்.

ii) அடக்க விலை நிர்ணயத் தணிக்கை

அறிக்கையில் கண்டுள்ள ஆண்டிற்கு, எறையூரில் உள்ள ஆலையின் அடக்கவிலைப் பதிவேடுகளை தணிக்கை செய்வதற்காக, திருவாளர்கள். மனோகரன் & கோ–ஐ அடக்கவிலைத் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்டார்கள். இத்தணிக்கையாளர் அடக்கவிலை தணிக்கை செய்து தனது அறிக்கையை இந்திய அரசுக்கு சமர்ப்பிப்பார்.

iii) இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவரின் தணிக்கை

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி, நிறுவனத்தின் கணக்குகளை இந்திய தலைமை கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவர், சோதனை/துணைத் தணிக்கை செய்துள்ளார். இந்திய அரசின் முதன்மை தணிக்கை துறைத் தலைவரின் கருத்துரை ஏதும் இல்லை என்ற அறிக்கை ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**16. ஊழியர்களைப் பற்றிய விவரங்கள்:**

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி, நிறுவனத்தின் எந்த ஒரு ஊழியரும் வரையறுக்கப்பட்ட வரம்புக்கு அதிகமாக ஊதியம் பெறவில்லை. எனவே, இதற்கான விளக்கம் ஏதும் இணைக்கப்பட வேண்டும் என்ற அவசியம் எழவில்லை.

**17. எரிசக்தி சேமிப்பு பற்றிய விவரங்கள்:**

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 134 (3) (அ)–ன்படி உடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (கணக்குகள்) விதி, 2014–ல் 8–ன்படி எரிசக்தி சேமிப்பு பற்றிய விவரங்கள்இணைக்கப்பட்டுள்ளன.

**18. இயக்குநர்களின் பொறுப்புகள்:**

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 134 (5)–க்கு இணங்க, இயக்குநர்கள் தெரிவிப்பது யாதெனில்:

i. வருடாந்திரக் கணக்குகள் தயாரிக்கும்போது கணக்கீட்டு மரபுகள் பின்பற்றியதுடன் குறிப்பிடத்தக்க விலகல் இருப்பின் முறையான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

ii. நிதி ஆண்டு முடிவில் நிறுவனத்தின் நிலவரம் மற்றும் ஏற்பட்ட இழப்பு சம்பந்தமான அறிக்கை உண்மையானதாகவும், செவ்வையானதாகவும் இருக்க இயக்குநர்கள் சரியான கணக்கீட்டு கோட்பாடுகளை தொடர்ச்சியாக செயல்படுத்தியதுடன் முக்கிய முடிவுகள் மற்றும் மதிப்பீடுகள் நியாயமானதாகவும், செயல்முறைக்கு ஒத்ததாகவும் இருந்தன.

iii. 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்ட விதிகளுக்கிணங்க, நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு, மோசடி மற்றும் முறைகேடுகளை கண்டுபிடிக்கவும், தவிர்க்கவும் தேவையான அளவில் கணக்கு ஆவணங்களை பராமரிப்பதில் முறையான மற்றும் போதுமான அளவில் இயக்குநர்களின் கவனம் செலுத்தப்பட்டது.

iv. தொடரும் நிறுவனங்களின் கோட்பாட்டின்படி, நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

v. இயக்குநர்கள் முறையான உள்நிதி கட்டுப்பாடு அமைப்பு இருப்பதாகவும், அதனை நிறுவனம் பின்பற்றும் எனவும், அந்த உள்நிதி கட்டுப்பாடு அமைப்பு போதுமானது எனவும் மற்றும் திறம்பட செயல்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

vi) இயக்குநர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்த தேவைப்படும் முறைகளை வகுத்துள்ளனர். அந்த முறைகள் போதுமானதாக உள்ளன.

**19. சுதந்திரமான இயக்குநர்களின் அறிக்கை:**

சுதந்திரமான இயக்குநர்கள், அவர்களுடைய சுதந்திரமான அறிவிப்பு அறிக்கை படிவத்தை சமர்ப்பித்துள்ளனர்.

**20. போதுமான அக கட்டுப்பாடு அமைப்பு:**

தற்போது பின்பற்றப்பட்டு வரும் அக கட்டுப்பாடு அமைப்பு நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. கரும்பு மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட மென்பொருள் உறுதியான அக கட்டுப்பாடு அமைப்பை நிர்வாகம் உருவாக்கி உள்ளது. சட்டபூர்வ தணிக்கையாளர்களின் தகுதிகள் தணிக்கைக் குழு கூட்டத்திலும் ஒருபயனுள்ளஅககட்டுப்பாட்டுஅமைப்பைக் கொண்டுவரவிரிவாகவிவாதிக்கப்பட்டன.

**21. இயக்குநர்களின் மாற்றங்கள் :**

தமிழ்நாடு அரசின் ஆணைப்படி ஏற்பட்ட அலுவலர் பணியிட மாற்றங்களின் விளைவாக இயக்குநர்கள் குழு மற்றும் முக்கிய அதிகாரிகள் மட்டத்தில் கீழ்க்கண்ட மாற்றங்கள் ஏற்பட்டன:

(i) திரு. S. அருண்ராஜ், இ.ஆ.ப பெரம்பலூர் மாவட்டத்தின் ஆட்சியர் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக இருந்த திருமதி. கிரேஸ் லால்ரிண்டிகி பச்சுவா, இ.ஆ.ப. அவர்கள் பணியிட மாற்றத்தில் சென்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தில் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார்.

(ii) திருமதி. V. மாலதி, மா.வ.அ / பொது மேலாளர் அவர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநராக இருந்த திருமதி. I. மகாலட்சுமி, பணியிடமாற்றத்தில் சென்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தில் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார்.

திருமதி. கிரேஸ் லால்ரிண்டிகி பச்சுவா, இ.ஆ.ப, திருமதி. I. மகாலட்சுமி, மற்றும் திரு. K.ரமேஷ், தங்களுடைய மதிப்பிடற்கரிய சேவை புரிந்தமைக்கும் உங்கள் இயக்குநர்கள் அவர்களது மனமார்ந்த பாராட்டுதல்களைப் பதிவு செய்ய விரும்புகிறார்கள்.

**22. பணியிடத்தில் பெண்களை பாலியில் துன்புறுத்தலுக்கு உட்படுத்துதல் (தடுப்பு தடை மற்றும் நிவாரணம்) சட்டம் 2013:**

நிறுவனத்தில் மேற்கூறிய சட்ட விதிகள் கடைபிடிக்கப்படுகின்றது. இதுவரை எந்த புகாரும் இல்லை.

**23. விழிப்புணர்வு:**

நிறுவனத்தின் உட்கட்டுப்பாடு மற்றும் தரநிலை மூலம் விழிப்புணர்வு செயல்படுத்தப்படுகிறது

**24. பொதுமக்களிடமிருந்து பெற்ற வைப்பு நிதி**

இந்நிறுவனம் பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி ஏதும் பெறவில்லை.

**25. செயலக தரங்களைக் கையாளுதல்:**

இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் செயலக தரங்களை கையாளுவதற்கு சரியான அமைப்பினை உருவாக்கியுள்ளனர்

**26 நன்றியுரை :**

இந்த ஆண்டில் நிறுவனத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதில் தொடர்ந்து ஆதரவு மற்றும் வழிகாட்டுதல் அளித்த தமிழக அரசு மற்றும் ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு உங்கள் இயக்குநர்கள் தங்கள் மனமார்ந்த நன்றியை பதிவு செய்ய விரும்புகிறார்கள்.

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இணைந்து ரொக்கக் கடன் வசதியை நிறுவனத்திற்கு வழங்குவதற்கான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவிற்காக உங்கள் இயக்குநர்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறார்கள்.

உங்கள் இயக்குநர்கள், சென்னை சர்க்கரைத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு இணையம், சென்னை ஆகியவற்றின் தொடர்ச்சியான ஆதரவை நிறுவனத்தின் வணிகத்தை நடத்துவதற்கு தங்கள் ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்குவதையும் ஒப்புக்கொண்டு நன்றியினை தெரிக்க விரும்புகின்றனர்.

ஆலைகள் சுமூகமாக இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கரும்பு விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு தங்களின் மனமார்ந்த நன்றிகளை பதிவு செய்ய உங்கள் இயக்குநர்கள் விரும்புவதுடன், வரும் ஆண்டுகளிலும் தொடர் ஒத்துழைப்பைக் கோருகின்றனர்

உங்கள் இயக்குநர்கள், நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து மட்டங்களிலும் உள்ள அலுவலர்கள், பணியாளர்கள் ஊழியர்களின் அர்ப்பணிப்பையும் கடின உழைப்பினையும் ஒப்புக்கொண்டு வருங்காலங்களில் நிறுவனத்தின் செயல்திறனை மேலும் மேம்படுத்துவதில் அதிக ஒத்துழைப்பு மற்றும் கடின உழைப்புயினை நல்க கோருகின்றனர்.

(இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி)

இடம் : சென்னை

நாள் : 18.08.2025

**த. அன்பழகன். இ.ஆ.ப**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்

# பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரையறுக்கப்பட்டது)

இணைப்பு – 1
படிவம் – அ (விதி 2–ஐப் பார்க்க)
எரிசக்தி சேமிப்பு தொடர்பான விவரங்கள் அடங்கிய படிவம்

| வரிசை எண் | விவரம் | அளவீடுகளின் அலகுகள் | நடப்பு ஆண்டு 2024–2025 | நடப்பு ஆண்டு 2023–2024 |
|---|---|---|---|---|
| அ. | **ஆற்றல் மற்றும் எரிபொருள் பயனீட்டளவு** | | | |
| 1. | **மின்சக்தி** | | | |
| | அ. வாங்கியது | | | |
| | மின்அலகு | கிலோவாட் மணிக்கு | 11,13,325 | 9,54,189 |
| | மொத்த தொகை | ரூ. லட்சத்தில் | 234.59 | 214.27 |
| | அலகு ஒன்றுக்கு | ரூ. | 21.07 | 22.46 |
| | **ஆ. சுயஉற்பத்தி** | | | |
| | i. டீசல் மின்உற்பத்தி கருவி மூலம்<br>ஒரு லிட்டர் டீசலுக்கு மின் அலகு<br>அடக்கவிலை அலகு ஒன்றுக்கு | யூனிட்கள்<br>கிலோவாட் மணிக்கு<br>ரூ. | 3290<br><br>1.84 | 3425<br><br>1.97 |
| | ii. நீராவி மின் உற்பத்தி கருவி மூலம் (மின் அலகுகள்) | கிலோவாட் மணிக்கு | 50.54 | 47.25 |
| | உபயோகித்த ஒரு டன் நீராவிக்கு மின் அலகுகள் | யூனிட்கள் | 1,55,90,000 | 3,28,42,000 |
| | அடக்கவிலை அலகு ஒன்றுக்கு | ரூ. | 170.38 | 182.00 |
| | | | (சொந்த நீராவி உபயோகிக்கப்பட்டது) | |
| 2. | நிலக்கரி (அளவு மற்றும் எங்கு உபயோகிக்கப்பட்ட தென குறிப்பிடவும்) | டன்கள் | இல்லை | இல்லை |
| 3. | எரி எண்ணெய் அளவு<br>மொத்த தொகை<br>சராசரி விலை | கிலோலிட்<br>ரூ. லட்சத்தில்<br>ரூ. கிலோ லிட்டர் | இல்லை<br>இல்லை<br>பொருந்தாது | இல்லை<br>இல்லை<br>பொருந்தாது |
| 4. | மற்ற / உள் உற்பத்தி | | இல்லை | இல்லை |
| ஆ. | **ஒரு குவிண்டால் சர்க்கரை உற்பத்திக்கு சக்தி பயனீட்டளவு** | | | |
| 1. | உற்பத்தி பொருள் – சர்க்கரை | குவிண்டால் | 145593 | 287208 |
| 2. | மின்சக்தி | கிலோவாட் மணிக்கு | 30.07 | 29.00 |
| 3. | எரி எண்ணெய் | லிட்டர் | இல்லை | இல்லை |
| 4. | நிலக்கரி (அளவை குறிப்பிடவும்) | மெ.டன் | இல்லை | 710.00 |
| 5. | மற்றவை : | | | |
| | கரும்பு சக்கை<br>கழிவுப்பாகு<br>கழிவு மண் | மெ.டன்<br>மெ.டன்<br>மெ.டன் | இல்லை<br>இல்லை<br>இல்லை | இல்லை<br>இல்லை<br>இல்லை |

**இ. எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள்**

(அ) எரிசக்தி சேமிப்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

—இல்லை—

(ஆ) நீராவி மற்றும் சக்தி குறைப்பு நடவடிக்கைகளுக்காக கூடுதல் முதலீடுகள் /செயற்குறிப்புகள்

—இல்லை—

(இ) மேற்கண்ட (அ) மற்றும் (ஆ)—ன்படி சக்தி குறைப்பு நடவடிக்கையின் விளைவும், அதைத் தொடர்ந்து உற்பத்தி பொருட்களின் கொள்முதல் விலை மீதான விளைவும்

—இல்லை—

**ஈ. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

இந்நிறுவனத்திற்கென சொந்தமாக தனியே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு ஏதும் இல்லை. எனினும் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தால் அமைக்கப் பெற்ற உயிரியல் கட்டுப்பாடு பரிசோதனைச் சாலை மற்றும் தென்னிந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஆகியவற்றால் கண்டுபிடிக்கப்படும் ஆராய்ச்சி முடிவுகளை இந்நிறுவனம் பயன்படுத்திக் கொள்கிறது. தற்போது மேற்படி நிறுவனங்கள் உயிரியல் உரம் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுப்பட்டுள்ளது.

**உ. தொழில் நுட்பவியல், ஏற்றல் மற்றும் செயல்படுத்துதல்இல்லை –**

—இல்லை—

**ஊ. அன்னிய செலாவணி ஈட்டுதல் மற்றும் செலவுகள்**

—இல்லை—

# படிவம் எண். MGT 9
# வருடாந்திர அறிக்கையின் சுருக்கம்

## 31.3.2025 தேதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டு

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் விதி 92 (3) மற்றும் 2014 ஆம் ஆண்டு நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி 12 (1) ன் படி அளிக்க வேண்டியது

## I. பதிவு மற்றும் இதர தகவல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நிறுவன எண் | யூ15520டிஎன்1976எஸ்ஜிசி007172 |
| 2. | பதிவு செய்யப்பட்ட நாள் | 24.7.1976 |
| 3. | நிறுவனத்தின் பெயர் | பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை) |
| 4. | நிறுவனத்தின் வகை | அரசு நிறுவனம்–பங்கு மூலதனம் மூலம் வரையறுக்கப்பட்டது. |
| 5. | பதிவு அலுவலக முகவரி | ஆவின் இல்லம், 2வது தளம்,<br>3A, பசும்பொன்முத்துராமலிங்கனார் சாலை,<br>நந்தனம், சென்னை – 600 035.<br>தமிழ்நாடு இந்தியா |
| 6. | பட்டியலிடப்பட்ட நிறுவனமா ? | இல்லை |
| 7. | பதிவுதாரர் மற்றும் பங்கு மாற்றும் முகவர் | பொருந்தாது |

(ii) நிறுவனத்தின் முக்கிய வியாபார நடவடிக்கைகள் (அனைத்து வியாபார நட– வடிக்கையின் மொத்த விற்று வரவில் 10% அல்லது அதற்கு மேல் உள்ள வியாபார நடவடிக்கைகள் குறிப்பிடவும்)

| வ. எண் | முக்கிய பொருள்களின் பெயர் | பொருள்களின் NIC கோடு எண் | மொத்த விற்று வரவில் சதவீதம் |
|---|---|---|---|
| 1. | சர்க்கரை | 10721 | 84.80 % |
| 2. | கழிவுப்பாகு | 10728 | 7.97 % |

(III) அ). பங்கு வைத்திருக்கும் முறைகள் (பங்கு வைத்திருக்கும் வகைப்படி மொத்த சம பங்குகளில் மூலதன சம பங்குகளின் விகிதாச்சார புள்ளி விபரம்)

| பிரிவு | ஆண்டு துவக்கத்தில் உள்ள பங்குகள் எண்ணிக்கை (31.03.2024 தேதிப்படி) | | | | ஆண்டு இறுதியில் உள்ள பங்குகள் எண்ணிக்கை (31.03.2025 தேதிப்படி) | | | | நடப்பு ஆண்டின் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | டிமேட் பங்குகள் | பங்கு சான்றிதழ் பங்குகள் | மொத்தம் | மொத்த பங்குகள் % | டிமேட் பங்குகள் | பங்கு சான்றிதழ் பங்குகள் | மொத்தம் | மொத்த பங்குகள் % | |
| **அ. நிறுவனர்** | | | | | | | | | |
| 1. இந்தியர் | | | | | | | | | |
| i. தனிமனிதன் /கூட்டுக் குடும்பம் | – | – | – | – | – | – | – | – | – |
| ii. மத்திய அரசு | – | – | – | – | – | – | – | – | – |
| iii. மாநில அரசுகள் | – | 20,72,01,895 | 20,72,01,895 | 99.0882 | – | 20,72,01,895 | 20,72,01,895 | 99.0882 | – |
| iv. வியாபார நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| v. வங்கிகள்/நிதி நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| vi. மற்றவர்கள்(அரசு நியமனம்) | | 14 | 14 | 0.0003 | – | 14 | 14 | 0.0003 | – |
| நிறுவனரின் மொத்த பங்குகள் | | 20,72,01,909 | 20,72,01,909 | 99.0885 | – | 20,72,01,909 | 20,72,01,909 | 99.0885 | – |
| **ஆ. பொதுமக்கள் பங்குகள்** | | | | | | | | | |
| 1). நிறுவனங்கள் | | | | | | | | | |
| i). சகாய நிதிகள் | – | – | – | – | – | – | – | – | – |
| ii). வங்கிகள்/நிதி நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| iii). மத்திய அரசு | – | – | – | – | – | – | – | – | – |
| iv). மாநில அரசு | – | – | – | – | – | – | – | – | – |
| v). Venture முதலீடு | – | – | – | – | – | – | – | – | – |
| vi). காப்பீட்டு நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| vii). நிதி நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| viii). அயல்நாட்டின் Venture முதலீடுகள் | – | – | – | – | – | – | – | – | – |
| ix). மற்றவைகள் (குறிப்பிடவும்) | – | – | – | – | – | – | – | – | – |
| **உள் கூட்டல்** | – | – | – | – | – | – | – | – | – |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2). நிறுவனங்கள் அல்லாதவைகள்** | | | | | | | | | |
| **அ) வர்த்தக நிறுவனங்கள்** | | | | | | | | | |
| (i) இந்தியர் | – | – | – | – | – | – | – | – | – |
| (ii) அயல்நாட்டினர் | – | – | – | – | – | – | – | – | – |
| **ஆ) தனி மனிதன்** | – | 19,05,976 | 19,05,976 | 0.9115 | – | 19,05,976 | 19,05,976 | 0.9115 | – |
| (i) ஒரு லட்சத்திற்குள் பங்குகள் வைத்திருப்பவர்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| (ii) 1 லட்சத்திற்கு மேல் பங்குகள் வைத்திருப்பவர்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| (iii) மற்றவர்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| | – | – | – | – | – | – | – | – | – |
| அயல்நாட்டு இந்தியர்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| அயல்நாட்டு நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| அயல்நாட்டினர் | – | – | – | – | – | – | – | – | – |
| பங்கு வர்த்தகர்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| டிரஸ்ட்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| வெளிநாட்டு நிறுவனங்கள் | – | – | – | – | – | – | – | – | – |
| மொத்தம் உள் கூட்டல் | – | 19,05,976 | 19,05,976 | 0.9115 | – | 19,05,976 | 19,05,976 | 0.9115 | – |
| **மொத்த பொது பங்குகள் ஆ(1)+ஆ(2)** | – | – | – | – | – | – | – | – | – |
| இ) **GDRs.** மற்றும் **ADRs.** க்கான பாதுக்காப்பாளர் பங்குகள் | – | – | – | – | – | – | – | – | – |
| **மொத்த கூட்டுத் தொகை (அ)+(ஆ)+(இ)** | – | 20,91,07,885 | 20,91,07,885 | 100.00 | – | 20,91,07,885 | 20,91,07,885 | 100.00 | – |

## ஆ. நிறுவனரின் பங்கு முதலீடு

| வ. எண். | பங்குதாரர் பெயர் | ஆண்டு துவக்கத்தில் உள்ள பங்குகள் | | | ஆண்டு இறுதியில் இருந்த பங்குகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பங்குகள் எண்ணிக்கை | மொத்தம் சதவீதம் | அடமானம் வைக்கப்பட்ட பங்குகள் % | பங்குகள் எண்ணிக்கை | மொத்தம் சதவீதம் | அடமானம் வைக்கப்பட்ட பங்குகள் % | |
| 1. | அரசு நிறுவன— தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் | 20,72,01,895 | 99.0882 | – | 20,72,01,895 | 99.0882 | – | – |
| 2. | அரசு நியமன அதிகாரிகள் | 14 | 0.0003 | – | 14 | 0.0003 | – | – |
| | மொத்தம் | 20,72,01,909 | 99.0885 | – | 20,72,01,909 | 99.0885 | – | – |

## இ. நிறுவனரின் பங்கு முதலீட்டின் மாற்றத்தைக் குறிப்பிடவும்

| வ. எண். | விபரம் | ஆண்டு துவக்கத்தில் உள்ள பங்குகள் | | ஆண்டு இறுதியில் இருந்த பங்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகள் எண்ணிக்கை | மொத்த பங்கில் % | பங்குகள் எண்ணிக்கை | மொத்த பங்கில் % |
| 1. | ஆண்டு துவக்கத்தில் | 20,72,01,895 | 99.0882 | 20,72,01,895 | 99.0882 |
| 2. | பங்குகளின் உயர்வு/குறைவு (காரணத்துடன்) | – | – | – | – |
| 3. | ஆண்டு இறுதியில் | 20,72,01,895 | 99.0882 | 20,72,01,895 | 99.0882 |

## ஈ. அதிக பங்குகள் வைத்திருக்கும் முதல் 10 நபர்கள்

(இயக்குநர்கள், நிறுவனர், GDRs., ADRs., வைத்திருப்போர் தவிர்த்து)

| வ. எண். | முதல் 10 நபர்கள் | ஆண்டு துவக்கத்தில் உள்ள பங்குகள் | | ஆண்டு இறுதியில் இருந்த பங்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகள் எண்ணிக்கை | மொத்த பங்கில் % | பங்குகள் எண்ணிக்கை | மொத்த பங்கில் % |
| 1 | ஆண்டு துவக்கத்தில் | 15,800 | 0.02 | 15,800 | 0.0076 |
| 2 | பங்குகளின் உயர்வு/ குறைவு (காரணத்துடன்) | – | – | – | – |
| 3 | ஆண்டு இறுதியில் | 15,800 | 0.02 | 15,800 | 0.0076 |

**உ. இயக்குநர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளின் பங்குகள்**

| வ. எண். | இயக்குநர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள் | ஆண்டு துவக்கத்தில் உள்ள பங்குகள் | | ஆண்டு இறுதியில் இருந்த பங்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகள் எண்ணிக்கை | மொத்தம் % | பங்குகள் எண்ணிக்கை | மொத்தம் % |
| 1 | ஆண்டு துவக்கத்தில் | 14 | 0.0003 | 14 | 0.0003 |
| 2 | தேதிவாரியாக உயர்வு/ குறைவு (காரணங்களுடன்) | – | – | – | – |
| 3 | ஆண்டு இறுதியில் | 14 | 0.0003 | 14 | 0.0003 |

**(IV) கொடுக்க வேண்டிய கடன்கள்: நிலுவையில் உள்ள வட்டி, செலுத்தப்பட வேண்டிய தொகை உள்ளிட்டது.**

(ரூ. இலட்சங்களில்)

| நிதி ஆண்டு துவக்கத்தில் உள்ள கடன்கள் | ஈட்டிய கடன்கள் (வைப்புத் தொகை தவிர) | ஈடற்ற கடன்கள் | வைப்பு நிதி | மொத்த கடன்கள் |
|---|---|---|---|---|
| (i) அசல் தொகை | 17,795.82 | – | – | 17,795.82 |
| (ii) நிலுவையுள்ள, செலுத்தப்படாத வட்டி | 6,593.59 | – | – | 6,593.59 |
| (iii) நிலுவையில் இல்லாத திரண்ட வட்டி | – | – | – | – |
| மொத்தம் (i) + (ii) + (iii) | 24,389.41 | – | – | 24,389.41 |
| நடப்பு ஆண்டு கடனில் உள்ள மாற்றம் | – | | | – |
| கூடுதல் | – | – | – | – |
| குறைவு | 1,018.87 | – | – | 1,018.87 |
| நிகர மாற்றம் | – | – | – | – |
| ஆண்டு இறுதியில் உள்ள கடன்கள் | – | | | – |
| (i) அசல் தொகை | 16,776.95 | – | – | 16,776.95 |
| (ii) நிலுவையில் உள்ள செலுத்தப்படாத வட்டி | – | – | – | – |
| (iii) நிலுவையில் இல்லாத திரண்ட வட்டி | 8,444.64 | – | – | 8,444.64 |
| மொத்தம் (i) + (ii) + (iii) | 25,221.59 | – | – | 25,221.59 |

**V. இயக்குநர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ஊதியம்**

**அ. மேலாண் இயக்குநர், முழுநேர இயக்குநர்கள்/மேலாளருக்கு அளிக்கப்பட்ட ஊதியம்**

**(ரூ.)**

| வ. எண். | ஊதிய விபரம் | முழு நேர இயக்குநர்கள் விபரம் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | திரு. K. ரமேஷ் (01.04.24 முதல் 31.3.25 வரை) | திருமதி.ஈஸ்வரி (10.03.24 முதல் 31.03.25 | |
| 1. | நிகர ஊதியம்<br>(a) வருமான வரி சட்டம் 1961, பிரிவு 17(1)ன்படி | 16,10,903 | 1,08,946 | 17,19,849 |
| | (b) வருமான வரி சட்டம் 1961, பிரிவு 17(2)ன்படி சலுகைகளின் மதிப்பு | | – | – |
| | (c) ஊதியத்திற்கு பதிலாக லாபத்தில் பங்கு வருமான வரி சட்டம் 1961, பிரிவு 17(3)ன்படி | | – | – |
| 2. | அளிக்கப்பட்ட பங்குகள் | | – | – |
| 3. | ஈடற்ற பங்குகள் | | – | – |
| | தரகு தொகை | | – | – |
| | இலாப சதவீதம் | | – | – |
| 4. | மற்றவை | | – | – |
| 5. | இதரவைகள் | | – | – |
| | மொத்தம் (அ) | | | |
| | சட்டப்படி உச்சவரம்புத் தொகை | | – | – |

**ஆ. மற்ற இயக்குநர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் (ரூ.)**

| வ. எண். | ஊதிய விபரம் | இயக்குநர்கள் பெயர் | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1. | 1. சுதந்திரமான இயக்குநர்கள் | Dr. D. சசிக்குமார் மற்றும் Dr. R. கருப்பையன் | –– |
| | – கூட்டத்தில் கலந்துகொள்ள அளிக்கப்பட்ட தொகை | மேலே கூறப்பட்ட இரு சுதந்திரமான இயக்குநர்கள் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசு துறைகளில் நிர்வாகிகளாக இருப்பதால், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. | |
| | – கமிஷன் | | |
| | – மற்றவைகள் | | |
| | மொத்தம் (1) | | |
| 2 | இதர முழுநேரம் அல்லாத இயக்குநர்கள் | | |
| | – கூட்டத்தில் கலந்துகொள்ள அளிக்கப்பட்டதொகை | | |
| | – தரகு தொகை | | |
| | – மற்றவை | | |
| | மொத்தம் (2) | | |
| | இயக்குநர்களுக்கு அளிக்கப்பட்ட மொத்த ஊதியம் (1)+(2) | | |
| | சட்டப்படி உச்சவரம்புத் தொகை | | |

**(இ) முக்கிய அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட ஊதியம்**

(மேலாண் இயக்குநர்/மேலாளர்/முழு நேர இயக்குநர் தவிர)

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண். | ஊதிய விபரம் | முக்கிய அதிகாரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | தலைமை கணக்கு அலுவலர் | நிறுவனச் செயலர் | |
| 1. | நிகர சம்பளம் | – | – | – |
| | – வருமான வரி சட்டம், 1961 பிரிவு எண் 17 (1)–ன் படி | – | – | – |
| | – வருமான வரி சட்டம், 1961 பிரிவு எண் 17 (2)ன்படி சலுகைகளின் மதிப்பு | – | – | – |
| 2. | அளிக்கப்பட்ட பங்குகள் | – | – | – |
| 3. | ஈடற்ற பங்குகள் | – | – | – |
| 4. | தரகு தொகை | – | – | – |
| | மொத்தத்தில் ரூ | – | – | – |
| | மற்றவை | – | – | – |
| 5. | இதர தொகைகள் | – | – | – |
| | மொத்தம் | – | – | – |

## VI. நிறுவனச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டனைகள், அபராதங்கள் விபரம்

| வகைகள் | | நிறுவன சட்டத்தின் பிரிவு | விபரம் | தண்டனை விபரம் | தண்டனை விதித்தவர் | மேல் முறையீடு |
|---|---|---|---|---|---|---|
| அ. | நிறுவனத்தின் மீதுஅபராதங்கள் தண்டனைகள் எதிர்கொண்டு கட்டப்பட்டஅபராதம் | | | | | |
| ஆ. | இயக்குநர்கள் மீது அபராதங்கள் தண்டனைகள் எதிர்கொண்டு கட்டப்பட்ட அபராதம் | | | | | |
| இ. | மற்ற அதிகாரிகள் மீது அபராதங்கள் தண்டனைகள் எதிர்கொண்டுகட்டப்பட்ட அபராதம் | | | | | |

இடம் : சென்னை
நாள் : 18.08.2025

**த. அன்பழகன். இ.ஆ.ப**
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்

# படிவம் எண். எம்.ஆர்.3
# 31.3.2025 உடன் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான தொழில் முறை நிறுமச் செயலரின் தணிக்கை அறிக்கை

(நிறுமங்களின் சட்டம், 2013 பிரிவு 204(1) மற்றும் நிறுமங்களின் (மேலாண்மை அலுவலர்களின் நியமனமும் மற்றும் சம்பளமும்) விதிகள் 2014, விதி எண்.9 ஆகியவற்றிற்கு இணங்க)

பெறுநர்:

உறுப்பினர்கள்,

பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரை)

சென்னை.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிட் (சிஐஎன்–யூ15520டிஎன்1976எஸ்ஜிசி007172) (இதன் பின்னர் இது நிறுமம் என்றே அழைக்கப்படும்) பொருந்தக்கூடிய சட்டப்படியான நிபந்தனைகள் மற்றும் நிறுமங்களுக்கான நல்ல நடைமுறைகள் சரியாக பின்பற்றப்படுகின்றதா என்றும் சரிபார்த்து ஆய்வு செய்திடும் தொழில்முறை செயலர்களின் தணிக்கை பணி எங்களால் மேற்கொள்ளப்பட்டது. நிறுமங்களின் நடவடிக்கைகள் / சட்டப்படியான நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றப்படுகின்றதா என நியாயமான அடிப்படையில் ஆய்வு செய்து எங்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் / எங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு சில நடைமுறைகளில் உள்ள வழிமுறைகளின்படி தணிக்கை நடத்தப்பட்டு, எங்களுடைய கருத்துக்களை பின்வருமாறு கூற விழைகின்றோம்.

இந்நிறுமத்தால் பராமரிக்கப்படும் புத்தகங்கள், ஆவணங்கள், கூட்டஅறிக்கை புத்தகங்கள், படிவங்கள், சமர்ப்பிக்கப்பட்ட காலமுறை அறிக்கைகள், இதர ஆவணங்கள் ஆகியவற்றை சரிபார்த்ததன் அடிப்படையிலும் மற்றும் 20 ஜீன் 2025 தேதியிட்ட சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கையின் நகல் அடிப்படையிலும், எங்களுக்கு கிடைக்கப் பெற்ற ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையிலும், இந்த நிறுமச் செயலகத் தணிக்கையின் போது இந்நிறுமத்தில் பணிபுரியும் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோரால் எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் மற்றும் மேற்கூறிய சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் எங்களின் கருத்துரைகளையும், புரிந்தல்களையும் அறிக்கையாக வழங்குகின்றோம். எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், எங்களுடைய வரையறுக்கப்பட்ட ஆய்வுகளின்படி, இந்நிறுமமானது 31.3.2025 அன்றுடன் முடிவடைந்த நிதி ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள சில விடுதல்களைத் தவிர சட்ட வழிமுறைகளை பின்பற்றியுள்ளது. கீழே பட்டியலிடப்பட்டுள்ள சட்டப்படியான நிபந்தனைகள், இயக்குநர்களின் குழுவின் செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் சரியாகப் பின்பற்றப்படுகின்றதா என்பது பற்றிய எங்களின் தணிக்கை அறிக்கை பின்வருமாறு:

31.3.2025 அன்றுடன் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான எங்களுக்கு வழங்கப்பட்ட இந்நிறுமத்தால் பராமரிக்கப்படும் புத்தகங்கள், ஆவணங்கள், கூட்ட அறிக்கை புத்தகங்கள், படிவங்கள், சமர்ப்பிக்கப்பட்ட காலமுறை அறிக்கைகள், இதர ஆவணங்கள் ஆகிய அனைத்தும் கீழ்க்கண்ட சட்டப்படியான, அவற்றிற்குரிய விதிமுறைகளின்படி பராமரிக்கபடுகின்றதாவென எங்களால் ஆய்வு சரிபார்க்கப்பட்டது.

(i) நிறுமங்களின் சட்டம் 2013 மற்றும் பொருந்தக்கூடிய விதிகள்.

(ii) பங்கு பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956, (எஸ்சிஆர்ஏ) மற்றும் அதனுடைய விதிகள்.

(iii) பங்கு டெபாசிட்டரீஸ் சட்டம், 1996 ஒழுங்குமுறைகள் மற்றும் அதனுடைய துணை விதிகள்.

(iv) அந்நிய செலாவணி நிர்வகித்தல் சட்டம், 1999 மற்றும் நேரடி அந்நிய முதலீடுகள், கடல் கடந்த நேரடி முதலீடுகள், வெளிநாடுகளின் வியாபார கடன்கள் ஆகியவற்றிற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்.–இந்நிறுவனத்திற்கு பொருந்தாது;

(v) நடப்பாண்டில், இந்நிறுமத்தின் பங்குகள் பட்டியலிடப்படாததால், இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (செபி) சட்டம், 1992–ன் கீழ்க்கண்ட ஒழுங்குமுறை மற்றும் வழிமுறைகள், இந்நிறுமத்திற்கு பொருந்தக்கூடியதல்ல.

அ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பங்குகளை வலுவான முறையில் தன்னகப்படுத்துதல், எடுத்துக் கொள்ளுதல்) ஒழுங்கு முறைகள் சட்டம், 2011.

ஆ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக்குழு (உள்ளடி வியாபாரங்களை தடுத்தல்) ஒழுங்கு முறைகள் சட்டம், 2015.

இ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (முதலீட்டு பத்திரங்களை வெளியிடுதல் மற்றும் தகவல் தெரிவித்தல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2018.

ஈ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பங்கு அடிப்படையிலான பணியாளர் கொடை மற்றும் உழைப்பு ஊதிய பங்கு), ஒழுங்குமுறை சட்டம், 2021.

உ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (மாற்ற முடியாத பத்திரங்கள் மற்றும் பங்குகளைப் பதிவு) ஒழுங்குமுறைகள் சட்டம், 2021.

ஊ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பங்குகளை வெளியிடும் பதிவு நிறுவனம் பங்குகளைப் பரிமாற்றம் செய்யும் முகவர்களும்) ஒழுங்கு முறைகள் சட்டம், 1993. நிறுமச்சட்டமும் வாடிக்கையாளர்களை கையாளுவதும் தொடர்பாக.

எ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழுவின் (பங்குகளை பங்குச் சந்தையில் பட்டியலிடுதலிலிருந்து திரும்பப் பெறுதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2021 மற்றும்

ஏ) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக்குழுவின் (பங்குகளை திரும்ப வாங்கிக் கொள்ளுதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2018.

vi) நிர்வாகத்தால் உறுதிப்படுத்தப்பட்டபடி, சர்க்கரைத் தொழிலாக கொண்டிருக்கும் இந்நிறுவனத்திற்கு குறிப்பாகப் பொருந்தக்கூடிய சட்டங்களைப் பின்பற்றி, இவற்றுக்கான இணக்கம் ஆலை மட்டத்தில் செய்யப்படுகிறது, 'ஈ' முதல் 'ஏ' வரை, உள்ள இனங்களில் தலைமை அலுவலக அளவில்அவை கவனமாகப் பின்பற்றப்படுகின்றன.

அ) இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923

ஆ) உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம், 2006

இ) அத்தியாவசிய பொருட்களின் சட்டம், 1955

ஈ) பொது நிறுவனங்களின் பணியகத்தின் அறிவுத்தல்கள் (பீபிஇ)

உ) பொதுத்துறை நிறுவன வழிகாட்டிகள் (பிஎஸ்யூ)

ஊ) சர்க்கரை சுங்க வரிச்சட்டம், 1982

எ) சர்க்கரை வழங்கும் விலை சமப்படுத்தும் சட்டம்,1976

ஏ) சர்க்கரை மேம்பாட்டு நிதி சட்டம், 1982

ஐ) ஏற்றுமதி (தரக்கட்டுப்பாடு மறுறும் ஆய்வு) சட்டம், 1963

ஒ) வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி சட்டம், 1986

ஓ) தொழில்துறை மற்றும் தொழிலாளர் சட்டங்கள் அதாவது தொழிற்சாலை மற்றும் பணியாளர் நலனைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள்.

ஔ) சுற்றுச்சூழல் சட்டங்கள் அதாவது காற்று, நீர் போன்றவை.

மேலும் பொருந்தக்கூடிய பின்வரும் இனங்கள் சரியாக பின்பற்றப்படுகின்றதா எனவும் எங்களால் ஆய்வு செய்யப்பட்டது.

(i) இந்தியப் பங்குச் சந்தைகளின் பரிமாற்றக் குழு (பட்டியலிடுதல்களின் பொறுப்பு மற்றும் தேவையான தகவல் வெளிப்படுத்துதல்) ஒழுங்குமுறைகள் சட்டம், 2015–ன்படி பங்குகளை பட்டியலிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் – இந்நிறுமத்திற்கு பொருந்தாது. ஏனெனில், இந்நிறுமத்தின் பங்குகள் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படவில்லை;

(ii) தணிக்கை ஆண்டில் இந்திய நிறுமச் செயலர்களின் பயிற்று நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இயக்குநர்களின் குழுக்கூட்டம் (எஸ்எஸ்–1) மற்றும் பொதுப்பேரவை கூட்டம் (எஸ்எஸ்–2). தொடர்புடைய தர நிர்ணய நடைமுறைகள்.

இந்நிறுவனம் ஒரு தமிழ்நாடு மாநில அரசு நிறுவனம் (பொது வரையறுக்கப்பட்ட நிறுவனம்) மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் விதிகளின் கீழ் ஒரு மாநில அரசு நிறுவனமாக இருப்பதால், அரசு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து விலக்குகள் மற்றும் சலுகைகளுக்கு இது தகுதியானது என்பது எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில், நிறுவனம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ள சில மீறல்களைத் தவிர, மேலே குறிப்பிட்டுள்ள சட்டம், விதிகள், ஒழுங்குமுறைகள், வழிகாட்டுதல்கள், தரநிலைகள் போன்றவற்றின் பொருந்தக்கூடிய விதிகளின்படி பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளுக்கு நிறுவனம் இணங்கியுள்ளது. அவையாவன:

1. நிறுவனத்தின் பொதுப்பேரவைக் கூட்டங்களை நடத்தும் விதம் மற்றும் மின்–வாக்களிக்கும் முறை வசதிக்கான ஏற்பாடுகள்.
2. சட்டம் மற்றும் செயலக தரநிலைகளின் தேவைகளுக்கு ஏற்ப கூட்ட நடவடிக்கை குறிப்புகள் மற்றும் பதிவுகளை பராமரித்தல்.,
3. சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப இயக்குநர்களின் நியமனம் & நிறுத்தம் மற்றும் நிறுவனத்தின் கூட்டங்களில் அவர்கள் பங்கேற்பது.
4. இயக்குநர் குழுவின் அறிக்கை மற்றும் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் கையெழுத்திட்டு ஒப்புதல்
5. மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லாத வேறு இடத்தில் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடத்தப்பட்டது. இருப்பினும், தமிழ்நாடு அரசு தடையில்லாச் சான்றிதழ் வழங்கியது மேலும் விண்ணப்பம் சரியான நேரத்தில் புதுதில்லி பெருநிறுவன விவகார அமைச்சக அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது,
6. பங்குகளை பரிமாற்றம் / பரிமாற்றம் செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் அது தொடர்பான குழுவின்பதிவேடுகள் பராமரிப்பு.
7. சட்டப்பிரிவுகளின் கீழ் தேவைப்படும் படிவங்கள் / வருமானங்களை தாக்கல் செய்தல்.
8. நிறுமங்களுக்கு இடையே உள்ள கடன்கள் / முன்பணங்கள்/ முதலீடு தொடர்பான சட்டப்படி தேவைப்படும் பரிவர்த்தனை விவரங்கள்
9. கணக்கியல் மென்பொருள் தணிக்கைப்பாதை இல்லா அம்சத்துடன் பராமரித்தல்.

சுயாதீன தணிக்கையாளரின் அறிக்கையின் இணைப்பு C இல் உள்ள தகுதிவாய்ந்த கருத்தின் அடிப்படை பத்தி எண்கள் (1) முதல் (7) வரையிலான தலைப்பில் முக்கியமான விவரங்களை குறிப்பிட விரும்புகிறோம்.

சட்டத்துடன் ஒத்த வகையில் இணங்குதல் குறித்த இந்த அறிக்கையில் உள்ள எங்கள் கருத்துகள் நிறுவனம் வழங்கிய மற்றும் எங்களால் சரிபார்க்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே உள்ளன.

நிறுவனத்திற்குப் பொருந்தக்கூடிய பல்வேறு சட்டங்களின் கீழ் நிதியாண்டில் நிறுவனத்தால் பெறப்பட்ட சட்டப்பூர்வ அதிகார அமைப்பு மற்றும் கடிதங்கள்/அறிவிப்புகளால் எழுப்பப்பட்ட அறிவிப்புகள் / குறைத்தீர்க்கத் தேவையான இடங்களில், நிறுவனம் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது என்பதை நாங்கள் குறிப்பிடுகிறோம்.

எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, நிறுவனத்திற்கு எதிராக பல வழக்குகள் மற்றும் தொழிலாளர் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் முந்தைய காலகட்டத்தில் ஊழியர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்குகளும் உள்ளன. நிலுவையில் உள்ள இந்த வழக்குகளின் முடிவு, பல்வேறு நீதிமன்றங்கள்/ மேல்முறையீட்டு அதிகாரிகளால் கூறப்படும் தீர்ப்புகளைப் பொறுத்தது. மேலும் தற்போது அதன் தாக்கங்கள் இப்போது சரியாக கணக்கிட முடியாததாக உள்ளது.

மேலே கண்டுள்ள விவரங்களோடு தொடர்புடைய ஆவணங்களை, நாங்கள் சரி பார்த்ததில் கீழ்காணும் விவரங்கள் தெரிய வருகின்றன.

இந்நிறுமத்தின் இயக்குநர்களின் குழு மிகச்சரியாக கட்டமைக்கப்பட்டு செயல் இயக்குநர்கள், மற்ற இயக்குநர்கள், சுதந்திரமான இயக்குநர்கள் ஆகியோர் உரிய விகிதத்தில் அமைந்துள்ளது. இயக்குநர்களின் கருத்துக்களும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன மேலும், நிறுமங்களின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, இந்நிறுமத்தின் இயக்குநர்களின் குழுவின் உறுப்பினர்கள் மாறுதல்கள் செய்யப்படுவதை எங்களுடைய ஆய்வில் கண்டறிந்தோம். சில சந்தர்ப்பங்களில் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிலை இல்லை.

இயக்குநர்களின் குழுக் கூட்டத்திற்காக போதுமான கால இடைவெளியில் முன் அறிவிப்புகள், செயல் பட்டியல்கள், அச்செயல் பட்டியல்களின் மீதான விரிவான குறிப்புகள் ஆகியவை இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தங்களை தயார்படுத்தி கொள்ளும் பொருட்டு முன் கூட்டியே அனைத்து இயக்குநர்களுக்கும் வழங்கப்படுகின்றன. மேலும், கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் தகவல்களையும், தெளிவுரைகளையும் பெறுவதற்கு ஒரு சில பிழைகளைத் தவிர இந்நிறுமத்தின் கட்டமைப்பு நன்றாக உள்ளது.

சிறுபான்மை நபர்களின் மாறுப்பட்ட கருத்துக்களையும் கவனத்தில் கொண்டே பெரும்பான்மையோரின் ஒருமித்த கருத்துகளின்படி அனைத்து நடவடிக்கைகளும் முடிவெடுக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன.

சட்டதிட்டங்கள், விதிகள், ஒழுங்கு முறைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவை சரியாக பொருந்தக் கூடியவகையில் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றதா என உறுதிப்படுத்த, நிறுமத்தின் செயல்முறைகளும் அமைப்பு முறைகளும் நிறுவனத்தின் பெரிய அளவிற்கேற்ப இருப்பது நன்று என நாங்கள் அறிவிக்கின்றோம்.

மேலும், நிதியாண்டில், நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கான கால நீட்டிப்புக்காக, சென்னை நிறுவனப் பதிவாளரிடமிருந்து நிறுவனம் ஒப்புதலைப் பெற்றுள்ளது என்று நாங்கள் தெரிவிக்கிறோம்.

ii. ஒத்திவைக்கப்பட்ட வரி, வரி விகிதங்கள் மற்றும் இருப்பு நிலைத் தேதியில் இயற்றப்பட்ட அல்லது நிலையான இயற்றப்பட்ட வரி சட்டங்களின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. ஒத்திவைக்கப் பட்ட வரி சொத்துக்கள் எதிர் காலத்தில் வரி விதிக்கப்படக் கூடிய வருமானம் போது மானதாக இருக்கும் என்ற நியாயமான உறுதி இருக்கும் அளவிற்கு மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது, வரி நோக்கங்களில் நிறுவனம் மதிப்பிடாத தேய்மானம் மற்றும் நேர வேறுபாடுகளைக் கொண்ட சூழ்நிலைகளில், ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் எதிர் கால வரி விதிப்பு இலாபங்களுக்கு எதிராக அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்களுக்கு நிச்சயமான நம்பகத் தன்மை இருந்தால் மட்டுமே அங்கீகரிக்கப்படும்.

ச. சொத்துகளின் மதிப்பு குறைவு: (கணக்கீடு மரபு 28)

கணக்கீடு மரபு 28–ன் படி வருட முடிவில் ஐந்தொகை குறிப்பில் சொத்துகளின் மதிப்பீடு குறைந்துள்ளதா என்று குறிப்பிட வேண்டும் நிறுவனத்தின் ஆளுமை குழுவின் கருத்தின் படி சொத்துகளின் பேரில் குறிப்பிட்டுள்ள மதிப்பானது ஐந்தொகை குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பை விட அதிகப்படியாக இருப்பதால், 31.03.2025 முடிய சொத்துகளின் மதிப்பில் குறைவு இருப்பதற்கு வாய்ப்பில்லை.

ஞ. ஒதுக்கீடுகள், நிபந்தனைக்குட்பட்ட பொறுப்புகள் மற்றும் நிபந்தனைக்குட்பட்ட சொத்துக்கள்: (கணக்கீடு மரபு–29) கடந்த கால நிகழ்வுகளின் அடிப்படையில் நிச்சயமாக செலுத்தப்பட வேண்டியிருக்கும் நடப்புப் பொறுப்புகளுக்கு ஒதுக்கீடு காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இதர செலவு நேரிடலாம்.

ஐந்தொகை குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பில் ஒதுக்கீடு செய்யப்படாத நிபந்தனைக்குட்பட்ட பொறுப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஒதுக்கீடு செய்யப்படாத நிபந்தனைக்குட்பட்ட சொத்துக்கள் அங்கீகரிக்கப்படவோ அல்லது தெரிவிக்கப்படவோ இல்லை.

**ஆ. கணக்குகள் மீதான குறிப்புகள்:**

**1. தணிக்கையாளர் கட்டணம்:**

2023–24 நிதியாண்டிற்கான தணிக்கைச் செலவுகளுடன் M/s. S.சதாசிவம் & கோ நிறுவனத்திற்கு Rs.1,19,720/– என்ற சட்டப்பூர்வ தணிக்கையாளர் கட்டணம் செலுத்தப்பட்டது மற்றும் 2024–25 நிதியாண்டிற்கான தணிக்கைக் கட்டணமாக M/s.தசரதன் & கோ விற்கு ரூ.85,500/– வழங்கப்பட உள்ளது.

**2. முந்தைய கால சரி செய்தல்:**

| வ. எண் | விபரங்கள் | 31.03.2025 |
|---|---|---|
| I | முந்தைய கால செலவுகள் | |
| 1 | வால் சந்த் இண்டஸ்ட்ரீஸ் | 11,47,102.00 |
| 2 | கழிவு பொருட்கள் விற்பனை | 97,245.84 |
| 3 | பழைய இயந்திரங்கள் விற்பனை | 15,80,871 |
| 4 | வட்டி மானியம் | 1,82,23,918 |
| 5 | மற்றவை | 34 |
| | தொகை (a) | 2,10,49,080.84 |
| II | முந்தையகால வருமானம் | |
| 1 | விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை | 5,15,000 |
| 2 | மற்றவை | 2,00,000 |
| | தொகை (b) | 7,15,000 |
| | மொத்தம் (a-b) | (2,03,34,081.00) |

**3) சச்சரவில் உள்ள சட்டப் பூர்வமாக செலுத்தப்பட வேண்டியவைகள்**

(i) சச்சரவின் காரணமாக கீழ்க்கண்ட நிலுவைத் தொகைகள் செலுத்தப்படவில்லை

| சட்டத்தின் பெயர் | 2024–25 தேதிப்படி | 2023–24 தேதிப்படி |
|---|---|---|
| (அ) வணிக வரி (கொள்முதல் மற்றும் விற்பனை வரி) (மதுரை விற்பனை வரி தீர்ப்பாயத்தில் உள்ளது) (திருச்சி விற்பனை வரி தீர்ப்பாயத்தில் நிலுவையிலுள்ளது) | 2,51,61,000/– | 2,51,61,000/– |
| (ஆ) வருமான வரி (ஆணையர் மேல்முறையீடு, சென்னை தீர்ப்பாயத்தில் உள்ளது) | 99,76,765/– | 99,76,765/– |

(ii) தமிழ்நாடு அனைத்து கூட்டுறவு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் அலுவலக ஊழியர்களின் பேரவையானது நீதிப்பேராணை எண்2325/2004–ஐ சென்னை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. அதனைத் தொடர்ந்து, தற்போது நடைமுறையிலுள்ள பொது தொகுப்பு அலுவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்திற்கு இணையாக தமிழ்நாடு அனைத்து கூட்டுறவு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் ஊழியர்களுடைய சம்பளத்தையும் மாற்றியமைத்து 1.4.2003 முதல் வழங்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு அந்த உத்தரவு ஜூலை2015–இல் பெறப்பட்டுள்ளது. ஆலை நிர்வாகம், இந்த உத்தரவிற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு(எண்54/55–2016) செய்து, அதே நிலை தொடர 27.01.2016 அன்று உத்தரவு பெற்றுள்ளது (வழக்கு எண்.561, 562, 563/2016).

(iii) மேல் முறையீட்டு அதிகாரிகள் முன் நிலுவையில் உள்ள தொழிலாளர் வழக்குகளுக்கு தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(iv) அது மட்டுமல்லாது பொதுவான கோரிக்கைகளுக்காகவும், தனிப்பட்டமுறையிலும் 6 தாவாக்கள் ஆலைத் தொழிலாளர்களால் பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டு தீர்வு செய்யப்படாமல் நிலுவையாக உள்ளன. இந்த தாவாதாரர்கள் கோரும், நிர்வாகத்தால் வழங்கப்பட வேண்டிய தொகை குறித்து கணக்கிடப்படவில்லை.

**4. நிலம்**

இந்நிறுவனம், பெரம்பலூர் சர்க்கரை ஆலை, எறையூர் ஆலையில் அமைந்துள்ள 29.98 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கழகத்துடன் (TANGEDCO) "இணை மின் உற்பத்தி திட்டம்" செயல்படுத்து வதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் 12.3.2010–ல் நிலகுத்தகை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

**5. இணை மின் திட்டம் மற்றும் ஆலை நவீனப்படுத்துதல் திட்டம்**

1. GO(MS)எண்.80 இன் படி நாள் 21/7/2009 இணை உற்பத்தி திட்டத்திற்கு ரூ.9.00 கோடியில் ரூ10 பங்களிப்பை விவசாயிகள் வழங்க வேண்டும். அதன்படி, 2005–06 முதல் 2014–15 வரை கரும்பு விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய கரும்புத் தொகையில் ரூ.7.88 கோடி வசூலிக்கப்பட்டது. ரூ.7.88 கோடியில் ரூ.6.64 கோடிகள் 20/10/2010. அன்று TANGEDCOக்கு அனுப்பப்பட்டது. மீதம் உள்ள தொகை நிறுவனத்திடம் உள்ளது.

   GO (MS) எண்.80 இன் படி கரும்பு விவசாயிகளிடமிருந்து இணை மின் உற்பத்திக்காக பெறப்பட்ட தொகைக்கு நிறுவன விவகார அமைச்சகம் பங்குகளை வெளியிடுவதற்கான முன்மொழிவை நிராகரித்தது, இருப்பினும், இது தொடர்பாக கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. இணை மின் திட்ட செலவு ரூ.96.14 கோடி மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளை நவீன மயமாக்குவதற்கான திட்ட செலவு ரூ.42.02 கோடி. TANGEDCO திட்டத்திற்கு 3 வருட கால அவகாசத்துடன் 13 வருட காலத்திற்கு கடனை உயர்த்தியுள்ளது. பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் கரும்பு விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் ரூ10 பங்களிக்க வேண்டும் மற்றும் பற்றாக்குறை இருந்தால், அரசால் பங்குத் தொகையாக வழங்கப்படும்.

3. ஒப்பந்தத்தின்படி, TANGEDCO கடனையும் வட்டியையும் கழித்து ஏற்றுமதி செய்யப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை தீர்க்க வேண்டும். ஆனால் TANGEDCO மின் கட்டணத்தை நிர்ணயிக்கவில்லை அல்லது கடன்கள் மற்றும் வட்டி விவரங்களை வழங்கவில்லை. எனவே, இவை பெறப்படும் போது பண அடிப்படையில் கணக்கிடப்படும்.

4. TANGEDCO–இலிருந்து பெறப்படும் மின் கட்டணத்தின் மதிப்பு முழுமையாக வருவாயாகக் கணக்கிடப்படுகிறது, இணை மின் திட்ட செயல்பாட்டிற்காக ஏற்படும் O&M செலவுகள் செலவினமாக கணக்கிடப்படுகிறது. சர்க்கரை ஆலைக்கு உரிமையை மாற்றும் வரை இணை மின் வசதி TANGEDCO –க்கு சொந்தமானது என்றாலும், O&M செலவுகள் கோரப்படவில்லை அல்லது பெறத்தக்கதாகக் கணக்கிடப்படவில்லை. எனினும் TANGEDCO கடன் வாங்கிய கடன் மற்றும் வட்டியை சரி செய்த பிறகு சொத்துக்களின் தேய்மான மதிப்பை மாற்றும் போதெல்லாம் வருவாயாகக் கணக்கிடப்படும் மின் கட்டணமும் மாறும்.

5. இந்த ஆண்டில், பெரம்பலூர் சர்க்கரை ஆலை ரூ.526.42 லட்சம் மற்றும் 31.03.2025 அன்று மொத்த தொகை ரூ.5,075.88 லட்சம் மின்சார உற்பத்தி செய்ததற்கு தொகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. 2022–23 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் தணிக்கையை PAG மேற்கொண்டபோது, பின்வரும் அவதானிப்பு செய்யப்பட்டது.

TANGEDCO, AASM மற்றும் PSM மூலம் உற்பத்தி செய்யப்படும் கரும்பு சக்கையை முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி இணை மின் ஆலையை அமைப்பதற்காக M/s. AASM தஞ்சாவூர் மற்றும் M/s. PSM பெரம்பலூர் ஆகியவற்றுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது. இந்த திட்டம் BOT கொள்கையின் அடிப்படையில் 13 ஆண்டுகளுக்கு ஒப்புதலின் பேரில் கூடுதலாக 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும். வாரியத்தால் எடுக்கப்பட்ட கடனைச் செலுத்தியபிறகு, சர்க்கரை ஆலை இணை மின் உற்பத்தி அலகை எடுத்துக்கொள்ள உரிமை உண்டு. TANGEDCO ஆனது சர்க்கரை தொழிற் சாலை நவீன மயமாக்கல் கருவிகளுடன் கூடிய ஒருங்கிணைப்பு மின் உற்பத்தி நிலையத்தை கொள் முதல் செய்தல் ஆகும். செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவை சர்க்கரை ஆலை செயல்படுத்த வேண்டியுள்ளது.

அதிகாரப் பூர்வ COD இறுதி செய்யப்படும் வரை இரு நிறுவனங்களும் 2018–19 முதல் தொடங்கி TANGEDCOக்கு மின்சாரம் ஏற்றுமதி செய்யத் தொடங்கின, இந்த இரு நிறுவனங்களும் M/s.AASM மற்றும் M/s. PSM ஆனது TANGEDCO விற்கு மின்சாரத்தை விற்பனை வருமானம் மற்றும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு (O&M) கட்டணங்களாக இலாபம் மற்றும் நஷ்டக் கணக்கில் செலவுகளாகக் கணக்கிட்டுள்ளது.

TANGEDCO மற்றும் ஆலைகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் விதி முறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி 4.1.7. AASM Ltd, "TANGEDCOக்கு ஏற்றுமதி செய்யப்படும் மின்சாரத்திற்காக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கடனளிப்பவருக்கு செலுத்த வேண்டிய தொகையைக் கழித்து, சர்க்கரை ஆலைக்கு செலுத்தும். கடனளிப்பவர்களிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கான முழுகடன் சேவைக்குப் பிறகு, தேய்மான விலையில் சர்க்கரை ஆலைக்கு இணை மின் உற்பத்தி ஆலைக்கு மாற்றப்படும் மேலும் E.6 (செலுத்துதல்) இன் படி," கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கடன் வழங்கு பவருக்கு செலுத்த வேண்டிய தொகையைக் கழித்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில், சர்க்கரை ஆலைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மின்சாரத்திற்காக TANGEDCO செலுத்த வேண்டும்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவனம் CMD, TANGEDCO ref. no.159/2023/A2 தேதியிட்ட 4.1.2024 கடிதத்தில் இது தொடர்பாகவும், அதன்பிறகு TANGEDCO அதிகாரிகளுடனான பல்வேறு சந்திப்புகளிலும் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. TANGEDCO வின் பதிலுக்காகக் காத்திருக்கிறது.

6. (அ) ரூ.4,61,87,163/– மதிப்புள்ள காலாவதியான ஆலை மற்றும் இயந்திரங்கள் 31.03.2025 இன் மொத்த சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளன, இதற்காக நிதியாண்டில் எந்த தேய்மானமும் கோரப்படவில்லை, மேலும் இது கண்டனம் செய்யப்பட்டு அகற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) முந்தைய ஆண்டுகளில், இயந்திரங்களின் சில முக்கிய பாகங்கள் சேதமடைந்த பிறகு அகற்றப்பட்டன, மேலும் இயந்திரங்களின் செயல்திறனை மேம்படுத்த புதிய பாகங்கள் சேர்க்கப்பட்டன. சேர்த்தல்கள் சொத்தில் சேர்க்கப்பட்டன, அதே நேரத்தில் இயந்திரங்களிலிருந்து அகற்றப்பட்ட முக்கிய பாகங்கள் ஸ்கிராப்பாக விற்கப்பட்டு வருவாயாகக் கணக்கிடப்பட்டன, இது தனித்தனியாக அடையாளம் காணப்படவில்லை. இருப்பினும், நிராகரிக்கப்பட்டட காலாவதியான இயந்திரங்களை அப்புறப்படுத்திய பிறகு, ரூ.15,80,871/– மதிப்பு தேய்மான கையிருப்பாக உள்ளது, இது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் தேய்மான கையிருப்பாக உள்ளது, இது முக்கிய பாகங்கள் ஸ்கிராப்பாக விற்கப்பட்டபோது, தற்போது முந்தைய காலச் செலவுகளாகக் கணக்கிடப்பட்டது.

**7. தொழிலாளர்கள் பயன்கள் – பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு**

(அ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகபணிக்கொடை திட்ட பொறுப்பாட்சியர்கள் மூலமாக இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன், குழுப்பணிக்கொடை (பணக்குவிப்பு) திட்டம், நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, வருமானவரி ஆணையர் ஒப்புதல் அளித்துள்ளார். தற்போது நடைமுறையில் இருக்கும் பணிக்கொடை (பணக்குவிப்பு) திட்டத்தின்படி, இந்நிறுவனம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தால் கொடுக்கப்படக்கூடிய நமதிப்பின் அடிப்படையில் நடப்பு ஆண்டுக்கு செலுத்த வேண்டிய பொறுப்புகளை கணக்கிட்டுள்ளது. இதற்காக 31.03.2025 தேதிப்படி தேவைப்பட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 31.03.2025 தேதிப்படி ஈட்டிய விடுப்பு பணப்பலன்கள் கணக்கிடப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஊழியர்கள் பணி முதிர்வு பலன்கள்: (கணக்கீடு மரபு–15)

(i) பணிக்கொடை (நிதி)

| விபரங்கள் | 31.3.2025 தேதிப்படி | 31.3.2024 தேதிப்படி |
|---|---|---|
| 1. ஊகங்கள்:<br>குறைத்து மதிப்பிடல்<br>சம்பள அதிகரிப்பு | <br>7.25%<br>7.25% | <br>7.00%<br>7.00% |
| 2. 31.03.2025 தேதிப்படி கடமைப் பொறுப்புகளின் தற்போதைய மதிப்பின் அட்டவணை: | | |
| கடமைப் பொறுப்புகளின் | 2,66,31,584 | 3,31,45,608 |
| தற்போதைய மதிப்பு வட்டி | 19,30,790 | 24,03,057 |
| நடப்பு சேவையின் | 17,16,787 | 19,44,157 |
| அடக்கவிலை அளிக்கப்பட்ட பலன்கள் | (1,01,38,089) | (73,20,514) |
| கொடுக்கப்படக்கூடிய பொறுப்புகள் (இலாபம்/இழப்பு) | 1,52,65,245 | 52,34,009 |
| கடமைப் பொறுப்புகளின் தற்போதைய மதிப்பு–ஆண்டு முடிவில் | 3,54,06,317 | 3,54,06,317 |
| 3. விலையில் மாற்றங்களின் அட்டவணை: 31.03.2025 தேதிப்படி திட்ட சொத்துகளின் நியாய | | |
| திட்ட சொத்துகளின் நியாய விலை–ஆண்டு | 1,84,59,779.70 | 2,42,80,896.14 |
| துவக்கத்தில் திட்ட சொத்துகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட | 1,18,4070.17 | 14,85,443.70 |
| வருவாய் பங்களிப்பு | 68,87,847.54 | 13,953.86 |
| வழங்கப்பட்ட பலன்கள் | (1,01,38,089) | (73,20,514) |

| | | |
|---|---|---|
| திட்ட சொத்துக்களில் நடைமுறை (இலாபம்/இழப்பு) | இல்லை | இல்லை |
| திட்ட சொத்துக்களின் நியாய விலை—ஆண்டு முடிவில் | 1,63,93,608.41 | 1,84,59,779.70 |
| **4.** திட்ட சொத்துக்களின் நியாய விலை அட்டவணை: | | |
| திட்ட சொத்துகளின் நியாய விலை— | 1,84,59,779.70 | 2,42,80,896.14 |
| ஆண்டு துவக்கத்தில் திட்ட சொத்துகளிலிருந்து வருவாய் | 11,84,070.17 | 14,85,443.70 |
| பங்களிப்பு வழங்கப்பட்ட | 68,87,847.54 | 13,953.86 |
| பலன்கள் | (1,01,38,089) | (73,20,514) |
| திட்ட சொத்துக்களின் நியாய விலை—ஆண்டு முடிவில் நிதிகளின் | 1,63,93,608.41 | 1,84,59,779.70 |
| அந்தஸ்து | (1,90,12,708.59) | (1,69,46,537.30) |
| திட்ட சொத்துக்கள், மீது மதிப்பீடு வருவாயை விட அதிகமாக கொடுக்கப் படக் கூடியது | இல்லை | இல்லை |
| (திருப்பிவரக் கூடிய வருவாய்=ARD மதிப்பீடு செய்யப்பட்ட வருவாய் மார்ச்,31 —ஆம் தேதிப் படி) | | |
| 5. 31.03.2025 தேதிப்படி நடைமுறையில் கொடுக்கப்படக் கூடியவைகளில் இலாபம்/இழப்பு: | | |
| கொடுக்கப்படக் கூடிய பொறுப்புகள் (இலாபம்/இழப்பு) | (1,52,65,245) | (52,34,009) |
| திட்ட சொத்துகளின் மீது கொடுக்கப்படக்கூடியவை (இலாபம்/இழப்பு) | | இல்லை |
| கொடுக்கப்படக்கூடிய பொறுப்புகள் (இலாபம்/இழப்பு) | 1,52,65,245 | 52,34,009 |
| ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கப்படக் கூடியவைகள் (இலாபம்/இழப்பு) | 1,52,65,245 | 52,34,009 |
| **6.** ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இலாப இழப்பு கணக்குகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள்: | | |
| ஆண்டு முடிவில் கடமைப் பொறுப்புகளின் தற்போதைய மதிப்பு | 3,54,06,317 | 3,54,06,317 |
| ஆண்டு முடிவில் திட்ட சொத்துக்களின் | 1,63,93,608.41 | 1,84,59,779.70 |
| பியாயமான மதிப்பு நிதிகளின் நிலை | (1,90,12,708.59) | (1,69,46,537.30) |
| ஐந்தொகைக் குறிப்பில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த சொத்துக்கள் (பொறுப்புகள்) | (1,90,12,708.59) | (1,69,46,537.30) |
| 7. ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இலாப இழப்பு கணக்குகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள்: | | |
| நடப்பு சேவைகளின் அடக்கவிலை | 17,16,787 | 19,44,157 |
| வட்டிகள் | 19,30,790 | 24,03,057 |
| திட்ட சொத்துகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் | (11,84,070.17) | (14,85,443.70) |
| நிகர அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கப்படகூடிய இலாபம்/இழப்பு | 1,52,65,245 | 52,34,009 |
| இலாப/இழப்பு கணக்குகளில் அங்கீகரிக்கப்பட்ட செலவுகள் | 1,77,28,752 | 80,95,779 |

(ii) ஈட்டிய விடுப்பை பணமாக்குதல் (நிதிசாராதது):

| கொடுக்கப்பட கூடியவை குறித்த முக்கிய ஊகங்கள் (நிறையிட்ட சராசரியில் கொடுக்கப்பட்டுள்ளது) | 31.3.2025 தேதிப்படி | 31.3.2024 தேதிப்படி |
|---|---|---|
| தள்ளுபடி சதவீதம் | 6.55% | 7.30% |
| சம்பள உயர்வு சதவீதம் | 6.00% | 6.00% |
| கால அளவு (Attrition) சதவீதம் | 5.00% | 5.00% |
| திட்ட சொத்துகள் மீது எதிர்பார்க்கப் படும் சதவீதம் | 0.00% | 0.00% |

| ஐந்தொகை குறிப்பில் எடுத்துக் கொள்ளப் பட்ட தொகை மற்றும் சம்பந்தப்பட்ட பகுப்பாய்வு | 31.3.2025 தேதிப்படி | 31.3.2024 தேதிப்படி |
|---|---|---|
| கடமை பொறுப்புகளின் | 1,50,05,619 | 1,68,70,388 |
| தற்போதைய மதிப்புதிட்ட சொத்துகளின் | – | – |
| நியாய விலை வித்தியாசம் | (1,50,05,619) | (1,68,70,388) |
| அங்கீகரிக்கப்படாத மாற்றமுடைய | – | – |
| பொறுப்புகள்அங்கீகரிக்கப்படாத கடந்த கால | – | – |
| பணிகளின் விலை ஐந்தொகையில் அங்கீகரிக்கப் பட்ட பொறுப்பு | (1,50,05,619) | (1,68,70,388) |

| இலாப இழப்பு கணக்கில் அங்கீகரிக்கப் பட்ட செலவு | 31.3.2025 தேதிப்படி | 31.3.2024 தேதிப்படி |
|---|---|---|
| நடப்பு பணிகளின் | 44,00,143 | 38,56,009 |
| செலவு வட்டி செலவு | 12,11,294 | 11,98,818 |
| திட்ட சொத்துகள் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | – |
| நடப்பு ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கப்படக்கூடிய நிகர இலாபம்/ | (34,79,460) | 3,77,129 |
| இழப்பு நடப்பு ஆண்டில் அங்கீகரிக்கப் பட்ட பொறுப்புகள் | – | – |
| கடந்த கால சேவைகளின் விலை (நிலையில்லாத பலன்கள்) | – | – |
| கடந்தகால சேவைகளின் விலை (நிலையான பலன்கள்) | – | – |
| இலாப இழப்பு கணக்கில் அங்கீகரிக்கப்பட்ட செலவு | 21,31,977 | 54,31,956 |

**8):** பிரிவு வாரியாக அறிக்கையிடுதல்:

நிறுவனம் சர்க்கரை உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், ஆலோசனை மற்றும் மின்சாரம் விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. இந்தியபட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய கணக்கியல் மரபு 17'' பிரிவு வாரியாக அறிக்கையிடல்'' தேவைப்படும் வெளிப்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூ. இலட்சத்தில்)

| விவரம் | 31.3.2025 தேதிப்படி | 31.3.2024 தேதிப்படி |
|---|---|---|
| பிரிவு வாரியான வருவாய் | | |
| சர்க்கரை உற்பத்தி மற்றும் விற்பனைகள் | 8,830.92 | 13,332.56 |
| மின் சக்தி விற்பனை | 526.42 | 1,147.43 |
| ஒதுக்கீடு செய்ய இயலாதது | 136.27 | 229.86 |
| **மொத்தம்** | **9,499.53** | **14,709.85** |
| பிரிவு வாரியான செலவுகள் | | |
| சர்க்கரை உற்பத்தி மற்றும் விற்பனைகள் | 8,842.26 | 15,203.49 |
| மின்சக்தி விற்பனை | 270.74 | 506.12 |
| ஒதுக்கீடு செய்ய இயலாதது | 3,245.77 | 60.40 |
| **மொத்தம்** | **12,358.78** | **15,770.02** |
| பிரிவு வாரியான சொத்துக்கள் | | |
| சர்க்கரை உற்பத்தி | 9,322.39 | 11,478.76 |
| மின்சக்தி விற்பனை | 4,428.83 | 4,867.57 |
| ஒதுக்கீடு செய்ய இயலாதது | 2.79 | 14.08 |
| **மொத்தம்** | **13,754.02** | **16,630.41** |
| பிரிவு வாரியான கடன்கள் | | |
| சர்க்கரை உற்பத்தி | 28,240.69 | 28,307.46 |
| மின்சக்தி விற்பனை | 430.76 | 74.51 |
| ஒதுக்கீடு செய்ய இயலாதது | 35.27 | 71.90 |
| **மொத்தம்** | **28,706.73** | **28,453.87** |

9. முந்தைய ஆண்டின் புள்ளி விவரங்கள், நடப்பு ஆண்டின் வகைப்பாடு வெளிப்படுத்தலுடன் ஒத்துப்போக தேவையான மறு சீரமைப்பு/மறுவகைப் படுத்தப்பட்டுள்ளது.

10. தொகைகள் இலட்சத்தில் கொணரப்பட்டுள்ளது.

| M. ஜான்பிரிட்டோ | C. ஆறுமுகம் | A. சங்கரலிங்கம் | V. மாலதி | த.அன்பழகன் |
|---|---|---|---|---|
| கணக்கு அலுவலர் | தலைமை கணக்கு அலுவலர் | நிறுமச் செயலாளர் | இயக்குநர் / தலைமை நிர்வாகி (மு.கூ.பொ.) | மேலாண்மை இயக்குநர் |

எங்கள் அறிக்கையின்படி
**திருவாளர்கள் தசரதன் & கோ**
பட்டயக்கணக்காளர்கள்
(பதிவு எண். 000688S)
**K. ராதா கிருஷ்ணன்**
பங்குதாரர் (உறுப்பினர் எண். 027131)
UDIN:25027131BMJLWD9368

இடம்: சென்னை
தேதி: 04.06.2025

# பெரம்பலூர் சர்க்கரை ஆலை (வரையறுக்கப்பட்டது)
## 31.3.2025–ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பண நடமாட்டம் பற்றிய அறிக்கை

**31.3.2025 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பண நடமாட்டம் பற்றிய அட்டவணை**

| விபரங்கள் | 2024–2025 | | 2023–2024 | |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **அ. செயல்முறை நடவடிக்கை மூலம் பண நடமாட்டம்** | | | | |
| இலாப/ (இழப்பு) கணக்கீட்டின் படி நிகர இலாபம் (இழப்பு) | | (2,859.25) | | 1,060.17 |
| சரி செய்தல் | | | | |
| கூட்டுக: | | | | |
| தேய்மானம் | 61.67 | | 59.23 | |
| செலுத்தப்பட்ட வட்டி | 2,175.33 | 2,237 | 2,486.52 | 2,545.74 |
| **உள்கூட்டல்** | | | | |
| கழிக்க: முதலீட்டு வருவாய் | | | | |
| வங்கியின் மூலம் பெறப்பட்ட வட்டி வருவாய் மற்றும் பிறவட்டி பெறப்பட்டது | 0.49 | | 0.56 | |
| ஈவுத்தொகை | 0.51 | | 3.92 | |
| **உள்கூட்டல்** | | 0.99 | | 4.49 |
| | | (623.25) | | 1,481.09 |
| **அ. செயல் மூல தனத்தில் மாறுதல்களுக்கு முன்பு இயக்க இலாபம்/இழப்பு** | | | | |
| சரி செய்தல் | | | | |
| கூட்டுக: | | | | |
| சரக்கு இருப்புகள் | 2,104.81 | | 370.33 | |
| வாணிபத்தில் பெற வேண்டியது | (239.27) | | (927.05) | |
| குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணம் | 979.04 | | 50.54 | |
| இதர நடப்பு சொத்துக்கள் | (75.47) | | (10.79) | |
| வியாபாரத்தில் செலுத்த வேண்டியவை* | 223.57 | | (30.28) | |
| இதர நடப்பு பொறுப்புகள் | (801.79) | | (716.87) | |
| குறுகிய கால ஒதுக்கீடுகள் | (1.11) | | 160.15 | |
| நீண்ட கால ஒதுக்கீடுகள் | | | – | |
| நீண்ட கால கடன்கள் மற்றும் முன் பணம் | | | – | |
| உள்கூட்டல் | | 2,189.78 | | (1,103.98) |
| செயல் முறை மூலமாக திரட்டப்பட்ட பணம் | | 1,566.53 | | 377.11 |
| கழிக்க: வருமான வரி | | – | | – |
| இயக்க நடவடிக்கையிலிருந்து பெற்ற நிகர பணம் (அ) | | 1,566.53 | | 377.11 |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஆ. முதலீடு நடவடிக்கைகள் மூலம் பண நடமாட்டம்** | | | | |
| பிலையான சொத்துகள் கொள்முதல் கூடுதல்/ குறைவு | | (234.68) | | (98.27) |
| பெறப்பட்ட வட்டி | | 0.49 | | 0.56 |
| ஈவுத் தொகை வருமானம் | | 0.51 | | 3.92 |
| நிதி நடவடிக்கை மூலம் நிகரபணம்(ஆ) | | (233.69) | | (93.79) |
| இ. பண நடமாட்ட நடவடிக்கைகள் மூலம் நிகர பணம் | | | | |
| நீண்ட காலக் கடன் வாங்கியதில் அதிகம்/குறைவு | | (36.63) | | (48.89) |
| குறுகிய காலக் கடன் வாங்கியதில் அதிகம்/குறைவு | | (982.24) | | 310.09 |
| செலுத்தப்பட்ட வட்டி | | (324.27) | | (564.25) |
| நிதி நடவடிக்கைகள் மூலம் நிகர பணம்(ஆ) | | (1,343.14) | | (303.05) |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவற்றில் நிகர அதிகரிப்பு / (குறைவு) (அ+ஆ+இ) | | (10.30) | | (19.73) |
| வருட ஆரம்பத்தில் பண இருப்பு | | 12.11 | | 31.84 |
| வருட இறுதியில் பண இருப்பு | | 1.81 | | 12.10 |

குறிப்பு:

1. மேலே உள்ள பணப்புழக்க அறிக்கை AS–3 இன் படி மறைமுக முறையில் தயாரிக்கப்பட்டது.

2. ரொக்கம் மற்றும் பணத்திற்கு சமமான கூறுகள்:

| | | |
|---|---|---|
| ரொக்ககையிருப்பு | 0.27 | 0.19 |
| வங்கிகளுடன் இருப்பு: | | |
| –நடப்பு கணக்குகளில் | 1.53 | 2.97 |
| –வைப்பு கணக்குகளில் | | 8.94 |
| | 1.81 | 12.10 |

**M. ஜான்பிரிட்டோ**
கணக்கு அலுவலர்

**C. ஆறுமுகம்**
தலைமை கணக்கு அலுவலர்

**A. சங்கரலிங்கம்**
நிறுமச் செயலாளர்

**V. மாலதி**
இயக்குநர் /
தலைமை நிர்வாகி (மு.கூ.பொ.)

**த.அன்பழகன்**
மேலாண்மை இயக்குநர்

எங்கள் அறிக்கையின்படி
**திருவாளர்கள் தசரதன் & கோ**
பட்டயக்கணக்காளர்கள்
(பதிவு எண். 000688S)
**K. ராதா கிருஷ்ணன்**
பங்குதாரர் (உறுப்பினர் எண். 027131)
UDIN:25027131BMJLWD9368

இடம்: சென்னை
தேதி: 04.06.2025

**தசரதன் & கோ**
பட்டயக் கணக்கர்கள்

146 A,மேற்கு உத்தாரா தெரு,
ஸ்ரீரங்கம், திருச்சி – 620 006.

# சுயாதீன தணிக்கையாளரின் அறிக்கை

பெறுநர்: உறுப்பினர்கள்'' பெரம்பலூர் சர்க்கரை ஆலை வரையறுக்கப்பட்டது''

சுயாதீன நிதி நிலைகளின் தணிக்கை குறித்து அறிக்கை

**தகுதி வாய்ந்த கருத்து**

பெரம்பலூர் சர்க்கரை ஆலைவரையறுக்கப்பட்டது எனும் நிறுவனத்தின் முழுமையான நிதிநிலை அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செஃநுதோம், அவை 2025 மார்ச் 31 ஆம் தேதி அன்றைய நாளின் இலாபநட்ட அறிக்கை, அன்றைய நாளில் முடிவடைந்த ஆண்டிற்கான பணநடமாட்ட அறிக்கைகள், அந்நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளும் பிறவிளக்கத் தகவல்களின்சுருக்கமும் ஆகும்.

எங்கள் கருத்தின்படியும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்களின்படியும் எங்களுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களின்படியும், தகுதி வாய்ந்த கருத்து எனும் பிரிவின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள செய்திகளின் விளைவுகளைத் தவிர, மார்ச் 31, 2025 அன்றைய நிலவரப்படி நிறுவனத்தின் விவகாரங்களின் நிலை, அதனுடைய நட்ட அறிக்கை அன்றைய நாளில் முடிவடைந்த ஆண்டிற்கான பணநடமாட்ட அறிக்கை ஆகிய மேற்கூறிய முழுமையான நிதிநிலை அறிக்கைகள் நிறுவனங்களின் சட்டம், 2013– இன் படி இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான ஒரு பார்வையை வழங்குவதன் மூலம் தேவையான தகவல்களைத் தருகின்றன.

தகுதி வாய்ந்த கருத்திற்கான அடிப்படை:

**1. கணக்குப் புத்தகங்கள்:**

அ. கணக்குகள் Tally Accounting தொகுப்பில் பராமரிக்கப்படுகின்றன. தொகுப்பில் உள்ளீடுகளைச் செருகுதல், மாற்றுதல் அல்லது நீக்குதல் ஆகியவற்றில் கட்டுப்பாடு இல்லை. மென் பொருளில் பதிவு தணிக்கைபாதை (எடிட்லாக்) வசதி இல்லை. சூழ்நிலையில், கணினியில் செய்யப்பட்ட தனிப்பட்ட மாற்றங்கள் மற்றும் அதற்கான அதிகாரத்தை திறம்பட கண்காணிக்க / குறுக்கு சரிபார்க்க முடியவில்லை. தணிக்கைப் பாதை பதிவு வசதி இல்லாததால், அதைச் சிதைப்பது சரிபார்ப்புக்கு சாத்தியமில்லை. இது ஒரு முக்கியமான/உணர் திறன் வாய்ந்த பகுதியாகும், ஏனெனில் இது சரியானஉள் கட்டுப்பாடு மற்றும் சரி பார்ப்பு இல்லாமல் நிதி/லாபத்தை நேரடியாக பாதிக்கும்.

ஆ) முன் தேதி அல்லது பிந்தைய தேதியுடன் செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான விதிவிலக்கான அறிக்கைகளை உருவாக்கும் அமைப்பு இல்லை. 31.03.2025 மதிப்புத் தேதியுடன் அனுப்பப்பட்ட எந்த சரி செய்தல் உள்ளீடுகளுக்கும் கணினி அடிப்படையிலான அறிக்கைகள், அடுத்தடுத்த தேதிகளில் உருவாக்கப்பட வேண்டும். தற்போதுள்ள வழிகாட்டுதல்களின் படி, உள்ளீடுகளின் ஞுமாற்றம்/அனுமதிக்கான தணிக்கைத் தடமும் பராமரிக்கப்பட வேண்டும்/ஆதாரமாக இருக்க வேண்டும்.

இ) தனிப்பட்ட கரும்பு விவசாயிகளிடமிருந்து கரும்பு பெறப்பட்டவுடன் கொள்முதல் பதிவுகள் உள்ளிடப்படுவதில்லை. பரிவர்த்தனைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மொத்தமாக உள்ளிடப்படுகின்றன.

**2) செயல்பாட்டில் இருந்து வருவாய் :**

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை கூட்டமைப்பு லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து ஒதுக்கீடு உத்தரவு பெறப்பட்டவுடன், விலைப் பட்டியல் தயாரிக்கும் நடைமுறையில் நிறுவனம் உள்ளது.

**3 ) சரக்குகள்:**

ஸ்டோர்ஸ் ரெக்கார்டுகள் ஒரு Tally தொகுப்பில் பராமரிக்கப்படுகின்றன மற்றும் நிதி கணக்குகளுக்காக பராமரிக்கப்படும் மற்ற Tally பேக்கேஜுடன் சமரசம் செய்யப்படவில்லை.

விலைப்பட்டியலின்படி உதிரிகளின் உண்மையான விலையில் பெரிய வேறுபாடுகள் உள்ளன மற்றும் டேலி பேக்கேஜ் தயாரிப்பில் வெளியிடப்படும் உதிரிபாகங்களின் விலை முற்றிலும் நம்பத்தகாதது.

**4) மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர நிறுவனத்தின் சட்டத்துடன் இணங்குதல் (MSME):**

நிறுவனம். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை அடையாளம் காண தேவையான விவரங்களை சேகரித்து பராமரிக்கவில்லை. MSME சப்ளையர்களின் பில்களின் பட்டியல் மற்றும் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைகள் டேலி பேக்கேஜில் பராமரிக்கப்படவில்லை/கிடைக்கவில்லை.

**5) சாலை மேம்பாட்டு நிதி:**

நிறுவனம் சாலை மேம்பாட்டு நிதியை கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து இருந்து வசூலித்துள்ளது. கணக்கின் தொடக்க இருப்பு ரூ.38,49,936.64. நிறுவனம் இந்த ஆண்டில் ரூ7,24,363/—ஐ வசூலித்துள்ளது.

**6) பகுதிமேம் பாட்டு நிதி**

இந்த தலைப்பின் கீழ் ரூ.24,19,157.24 நிலுவையில் உள்ளது, இது நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. அதற்கானபதிவு எதுவும் நடத்தப்படவில்லை.

**7) இருப்பு உறுதிப்படுத்தல்கள்:**

அ. கடன்கள் மற்றும் அட்வான்ஸ்கள், வர்த்தக வரவுகள், செலுத்த வேண்டிய வர்த்தகம், தற்போதைய பொறுப்புகள் மற்றும் பிற தற்போதைய சொத்துகளுக்கான பெரும்பான்மையான வழக்குகளில் இருந்து நிலுவைகளின் உறுதிப்படுத்தல் பெறப்படவில்லை. (உதாரணத்திற்கு, வர்த்தகத்திற்கு வெளியே பெறத்தக்கவைகள் ரூ. 5594.65 லட்சத்தில் ரூ. 49.26 லட் சத்திற்கு மட்டுமே அனுப்பப்பட்டது).

இருப்பு உறுதிப்படுத்தல் விரிவான உறுதிப்படுத்தல் இல்லாத பட்சத்தில், அந்த பொருட்களின் சுமந்து செல்லும் மதிப்பில் ஏதேனும் இருந்தால், பரிசீலனையில் உள்ள ஆண்டிற்கான நிறுவனத்தின் இழப்பின் மீதான தாக்கம் தீர்மானிக்கப்படாது.

ஆ) செலுத்த வேண்டிய வர்த்தகம், பெறத்தக்க வர்த்தகம், பிற நடப்பு பொறுப்புகள், நீண்ட கால கடன்கள் மற்றும் முன் பணங்கள், குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணங்கள் அல்லது கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியவை அடங்கும். பொறுப்பு/மீட்டமைப்பின் தன்மை அறியப்படவில்லை, பெரும்பாலான தரப்பினர் கண்டுபிடிக்க முடியாதவை மற்றும் நிலுவையில் உள்ள நிலுவைகளை உறுதிப்படுத்துதல் பெறப்படாமலும் அல்லது அதற்குப் பிறகு தீர்க்கப்படாமலும், வரம்புச்சட்டத்தால் காலாவதியானது. நிதிநிலை அறிக்கையில் பழைய நிலுவைகளை தக்கவைத்துக் கொள்வதன் சரியான தன்மை குறித்து எங்களால் கருத்து தெரிவிக்க முடியவில்லை.

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 143(10) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கைக்கான தர நிலைகளுக்கு (SAs) இணங்க நாங்கள் எங்கள் தணிக்கையை மேற்கொண்டோம். அந்த தர நிலைகளின் கீழ் எங்களின் பொறுப்புகள் எங்கள் நிதி நிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அங்குள்ள விதிகளின் கீழ், நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கு பொருத்தமான நெறிமுறைத் தேவைகளுடன், இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் வழங்கிய நெறிமுறைக் கோட்பாட்டின் படி நாங்கள் நிறுவனத்திலிருந்து சுயாதீனமாக இருக்கிறோம். இந்தத் தேவைகள் மற்றும் நெறிமுறைக் கோட்பாட்டிற்குகீழ், இணங்க எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்றதணிக்கை சான்றுகள் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**முக்கிய தணிக்கை விஷயங்கள்:**

முக்கிய தணிக்கை விஷயங்கள், எங்கள் தொழில் முறை மதிப்பீட்டில், தற்போதைய காலக் கட்டத்தின் முழுமையான நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாழ்ந்தவை. இந்த விடயங்கள் நிதிநிலை அறிக்கைகளை ஒட்டு மொத்தமாக தணிக்கை செய்ததன் பின்னணியிலும், அது குறித்த எங்கள் கருத்தை உருவாக்கும்

போதும் பேசப்பட்டது, மேலும் இந்த விஷயங்களில் நாங்கள் தனியான கருத்தை வழங்கவில்லை. எங்கள் கருத்தின் படி மற்றும் எங்களுக்குத் தரப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில், மேலே உள்ள தகுதி வாய்ந்த Opinion பிரிவில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதைத் தவிர, எங்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட வேண்டிய முக்கிய தணிக்கை விஷயங்கள் எதுவும் இல்லை.

**பொருளின் முக்கியத்துவம்:**

எங்கள் அறிக்கைக்கு தகுதி பெறாமல், இது தொடர்பான முழுமையான நிதி நிலை அறிக்கைகளுக்கு கவனத்தை ஈர்க்கிறோம்.

**(1)** நிறுவனத்திற்கு எதிராக பல வழக்குகள் மற்றும் தொழிலாளர் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் முந்தையகால கட்டத்தில் பணியாளர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்குகள் உள்ளன. நிலுவையில் உள்ள இந்த வழக்குகளின் முடிவு, பல்வேறு நீதிமன்றங்கள்/மேல் முறையீட்டு அதிகாரிகளால் வழங்கப்பட வேண்டிய தீர்ப்புகளைப் பொறுத்தது மற்றும் தற்போது நிச்சயமற்றதாக உள்ளது.

**(2)** இணைஜென் திட்டத்திற்கான திட்டச் செலவை இறுதி செய்ய நிலுவையில் உள்ளது மற்றும் செலவு உறுதிப்பாட்டின் பங்கு இன்னும் இறுதி செய்யப்படவில்லை – மற்றும்

**(3)** Bagasse ஐ தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து கோ–ஜெனரேஷன் பவர் ஆலைக்கு மாற்றப்பட்டது (TANGEDCO) **2018–19** முதல் **2023–2024** வரை உரிமை கோரப்படவில்லை/கணக்கிடப்படவில்லை. இந்த நிச்சயமற்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டு, நிதிநிலை அறிக்கையில் எந்த மாற்றங்களும் பரிசீலிக்கப்படவில்லை மற்றும் எங்கள் அறிக்கை இல்லை இந்த விஷயங்களில் மாற்றியமைக்கப்பட்டது.

**நிதிநிலை அறிக்கைகள் மற்றும் தணிக்கையாளர் அறிக்கையைத் தவிர மற்ற தகவல்கள்.**

மற்ற தகவல்களுக்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு பொறுப்பாகும். மற்ற தகவல் என்பது, ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவலை உள்ளடக்கியது, ஆனால் நிதி அறிக்கைகள் மற்றும் தணிக்கையாளரின் அறிக்கையை உள்ளடக்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்து மற்ற தகவல்களை உள்ளடக்காது, மேலும் நாங்கள் எந்த விதமான உறுதியையும் அல்லது முடிவையும் வெளிப்படுத்த மாட்டோம்.

நிதிநிலை அறிக்கைகளில் எங்கள் தணிக்கை தொடர்பாக, மேலே குறிப்பிட்டுள்ள மற்ற தகவல்கள் கிடைக்கும் போது அவற்றைப் படிப்பதும், அவ்வாறு செய்யும் போது, மற்ற தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுடனோ அல்லது அதன் பொருட்டு பெறப்பட்ட தகவல்கள் முரணாக உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வது எங்கள் பொறுப்பு அல்லது வேறு விதமாக இருப்பின் தவறாக குறிப்பிடப்பட்டதாக தோன்றுகிறது.

நிர்வாக அறிக்கையைப் படிக்கும் போது, அதில் பொருள் தவறாகக் கூறப்பட்டுள்ளது என்று முடிவு செய்தால்; மற்ற தகவல் தொடர்பான தணிக்கையாளரின் பொறுப்புகள் தணிக்கையின் தர நிலை 720–இன் கீழ் ஆளுகைக்கு பொறுப்பானவர்களுக்கு தேவைப்படும் விவரங்கள் நாங்கள் தெரிவிக்க வேண்டும்.

நிர்வாகத்தின் முழுமையான நிதிநிலை அறிக்கைகளுக்கான ஆளுகைக்கு உட்பட்டவர்களின் பொறுப்புகள் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 134(5) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிலை, நிதி செயல் திறன், பண நடமாட்டம் ஆகியனபற்றிய உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை வழங்கும் இந்த முழுமையான நிதி நிலை அறிக்கைகளை உருவாக்குவது தொடர்பான செயல்களுக்கு இந்நிறுவனத்தின் இயக்குநர்களின் குழுவே முழு பொறுப்பாகும்.

இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க நிறுவனத்தின் செயல்பாடுகள், நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 133 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் செந்தரநிலைகள் உட்பட நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் பிறமுறை கேடுகளைத் தடுப்பதற்கும், கண்டறிவதற்கும் சட்டத்தின் விதிகளின்படி போதுமான கணக்கு பதிவுகளை பராமரிப்பதும் இந்த பொறுப்புகளில் அடங்கும்; அவை பொருத்தமான கணக்கியல் கொள்கைகளின் தேர்வு மற்றும் பயன்பாடு; நியாயமான மற்றும்

ஜீவேகமான தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளை உருவாக்குதல்; கணக்கியல் பதிவுகளின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதி செய்வதற்காக திறம்பட செயல்பட்டுவந்த, உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற மோசடி அல்லது பிழை காரணமாக இருந்தாலும். தவறாகப் புரிந்து கொள்ளாத நிதி நிலை அறிக்கைகளை உருவாக்குதல் மற்றும் விளக்கக் காட்சிக்கு பொருத்தமான, போதுமான உள்ளக நிதிக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயல்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளாகும்.

நிதி நிலை அறிக்கைகளை உருவாக்குவதில், நிறுவனத்தின் திறனைத் தொடர்ந்து மதிப்பிடுவதற்கும், பொருந்தக் கூடியவகையில், தொடர்புடைய செய்திகளை வெளிப்படுத்துவதற்கும், கணக்கியல் தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்துவதற்கும் நிறுவனத்தை கலைத்தல் அல்லது அதன் செயல்பாடுகளை நிறுத்துதல், அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று இல்லை என முடிவு செய்வதற்கும் இயக்குநர்களின் குழுவே பொறுப்பாகும்.

மேலும் நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கை செயல் முறையை மேற்பார்வையிடுவதற்கும் இவ்வியக்குநர்களின் குழுவே முழு பொறுப்பாகும்.

**நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கை செய்வதற்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்**

மோசடி அல்லது பிழையின் காரணமாக, ஒட்டுமொத்த நிதி நிலை அறிக்கைகளின் பொருள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்களுடைய கருத்தை உள்ளடக்கிய ஒரு தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்களுடைய நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர்மட்ட உத்தரவாதமாகும், ஆனால் கணக்கியல் கோட்பாடுகளுக்கிணங்க நடத்தப்பட்ட ஒரு தணிக்கை எப்போதுமே ஒரு பொருள் தவறாக இருக்கும் போது அதைக்கண்டறிய முடியும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. ஆவை தவறான தகவல்கள் மோசடியிலிருந்து அல்லது பிழையிலிருந்து எழக்கூடும், மேலும் அவை தனித் தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இருந்தால், இந்த நிதி நிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனாளர்களின் பொருளாதார முடிவுகளில் அவை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கலாம்.

கணக்கியல் கோட்பாடுகளுக்கிணங்க ஒரு தணிக்கையின் ஒரு பகுதியாக, நாங்கள் தொழில் முறையிலான முடிவை வழங்குகிறோம் மற்றும் தணிக்கை முழுவதும் தொழில் முறை சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு உள்ளதா என்பதை தணிக்கை முழுவதிலும் செயல்படுத்துகிறோம்.

நாங்கள் மோசடி அல்லது பிழை காரணமாக நிதி நிலை அறிக்கைகளின் பொருள் தவறாக மதிப்பிடுவதன் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடுகளை செய்கின்றோம், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கக்கூடிய தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துகின்றோம், மேலும் எங்களுடைய கருத்திற்கு ஒரு அடிப்படையை வழங்க போதுமானதும் பொருத்தமானதுமான தணிக்கை சான்றுகளைப் பெறச் செய்கின்றோம். மோசடியின் விளைவாக ஒரு பொருள் தவறாகக் கண்டறியப்படாத ஆபத்து அல்லது பிழையின் விளைவாக ஏற்பட்டதை விட அதிகமாக உள்ளதாவென கண்டறிகின்றோம், ஏனெனில் மோசடியில் கூட்டு சேருதல், மோசடி செய்தல், வேண்டுமென்றே விடுதல்கள், தவறான விளக்கங்கள் அல்லது உள்ளககட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவைகளும் அடங்கும்.

பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்கவும் தணிக்கைக்கு தொடர்புடைய உள்ளக கட்டுப்பாடு குறித்த புரிதலைப் பெறவும் செடீநுகின்றோம். நிறுவனங்களின் சட்டம், 2013 இன் பிரிவு 143(3)(ை)–ன் கீழ், நிறுவனத்திற்கு போதுமான உள்ளக நிதி நிலைக் கட்டுப்பாட்டு முறைமை உள்ளதா என்பதையும், அத்தகைய கட்டுப்பாடுகளின் செயல்பாட்டின் செயல்திறன் குறித்தும் எங்களுடைய கருத்தை வெளிப்படுத்துவதற்கும் நாங்கள் பொறுப்பாவோம். பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் நிர்வாகத்தால் செடீநுயப்பட்ட வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல் ஆகியவை எங்கள் பொறுப்பாகும்.

கொள்கைகளின் சரியான முறையிலான பயன்பாடு மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல்.

நிறுவன நீடிப்பின் அடிப்படையை நிர்வாகத்தின் பயன்பாட்டின் சரியான தன்மை மற்றும் பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகளுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மை இருக்கிறதா என்பது குறித்த முடிவு நிறுவனத்தின் திறனைப் பற்றிய குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும். பொருள் நிச்சய மற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால். நிதி அறிக்கைகளில் தொடர்புடைய வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தை மாற்ற வேண்டும். எங்கள் முடிவுகள் எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் காரணமாக நிறுவனம் தொடர்ந்து செயல்பட இயலாமல் போகலாம்.

நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக் காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றுடன் வெளிப்பாடுகளையும் சேர்த்து மதிப்பீடு செய்தல் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான விளக்கக் காட்சியை அடையும் வகையில் அடிப்படை பரிமாற்றங்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்கின்றோம்.

மெட்டீரியலிட்டி என்பது தனித்தனியான நிதி நிலை அறிக்கைகளில் உள்ள தவறான அறிக்கைகளின் அளவு, தனித் தனியாகவோ அல்லது மொத்தமாகவோ, தனித்தனி நிதி நிலை அறிக்கைகளின் நியாயமான அறிவுள்ள பயனரின் பொருளாதார முடிவுகள் பாதிக்கப்படுவதை சாத்தியமாக்குகிறது. அளவுசார் பொருள் மற்றும் தரமான காரணிகளை நாங்கள் கருதுகிறோம்.

(i) எங்கள் தணிக்கை பணியின் நோக்கத்தை திட்டமிடுதல் மற்றும் எங்கள் வேலையின் முடிவுகளை மதிப்பீடு செய்தல்; மற்றும்

(ii) தனித்த நிதி நிலை அறிக்கைகளில் அடையாளம் காணப்பட்ட தவறான அறிக்கைகளின் விளைவை மதிப்பீடு செய்தல்.

தணிக்கை பணியின் போது நாங்கள் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, தணிக்கையின் திட்டமிடப்பட்ட நோக்கம், காலம், குறிப்பிடத்தக்க தணிக்கை கண்டுபிடிப்புகள் ஆகியன குறித்து தொடர்புடைய ஆளுகைக்கு உட்பட்டவர்களுக்கு நாங்கள் தகவலை தெரிவிக்கின்றோம்.

தொடர்பான பொருத்தமான நெறிமுறைத் தேவைகளுக்கு நாங்கள் இணங்கியுள்ளோம், மேலும் எங்களுடைய சுதந்திரம் குறித்து நியாயமானதாகக் கருதக்கூடிய அனைத்து தொடர்புகளையும் மற்றும் பிற செய்திகளையும் அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கும், பொருந்தக்கூடிய, தொடர்புடைய பாதுகாப்புகளுடன் இருப்பதற்கும் நாங்கள் தொடர்புடைய ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு அறிக்கையாக வழங்குகிறோம்.

தற்போதைய காலக்கட்டத்தின் முழுமையான நிதி நிலை அறிக்கைகளின் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் முக்கிய தணிக்கை விவகாரங்களை ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் தொடர்பு கொண்ட விஷயங்களில் இருந்து நாங்கள் தீர்மானிக்கிறோம். இந்தவிஷயத்தைப் பற்றிய பொது வெளிப்பாட்டை சட்டம் அல்லது ஒழுங்கு முறை தடுக்காத வரையில் அல்லது மிகவும் அரிதான சூழ்நிலைகளில், ஒருவிஷயத்தை எங்கள் அறிக்கையில் தெரிவிக்கக் கூடாது என்று நாங்கள் தீர்மானிக்கும் வரை, எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் இந்த விஷயங்களை விவரிக்கிறோம், ஏனெனில் செயல்களின் பாதகமான விளைவுகள் நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படும். அத்தகைய தகவல் தொடர்புகளின் பொது நலன்கள்.

**பிற சட்ட மற்றும் ஒழுங்கு முறை தேவைகள் குறித்த அறிக்கை**

1. நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 143 இன் துணைப் பிரிவு (11) இன் அடிப்படையில் மத்திய அரசு வழங்கிய நிறுவனங்கள் (தணிக்கையாளர் அறிக்கை) உத்தரவு, 2016 இன் படி, உத்தரவின் 3 மற்றும் 4 பத்திகளில்

குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளில் பொருந்தக்கூடிய அளவிற்கு, இணைப்பு–அ இன் அறிக்கையில் நாங்கள் வழங்கியுள்ளோம்.

2. சட்டத்தின் 143(5) பிரிவின் படி, இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கையாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, ""இணைப்பு B"" இல் கொடுக்கிறோம்.

3. நிறுவனங்களின் சட்டத்தின் பிரிவு 143 (3) இன் படி, நாங்கள் தெரிவிப்பதாவது.

(அ) எங்கள் தணிக்கை நோக்கங்களுக்காக சிறந்த முறையில் எங்களுக்கு தெரிந்த வகையிலும் நம்பிக்கைக்கும் உரிய வகையில் அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் கேட்டு பெற்றுக் கொண்டோம்.

(ஆ) எங்கள் கருத்துப்படி, சட்டப்படி தேவைப்படும் சரியான கணக்கு புத்தகங்களை இந்நிறுவனம் இதுவரை வைத்திருக்கிறது, அந்த கணக்கு புத்தகங்களை நாங்கள் பரிசோதித்ததில் இருந்து இது தெரியவருகிறது.

(இ) இருப்பு நிலை குறிப்பு, இலாப நட்ட அறிக்கை, இந்த அறிக்கையால் கையாளப்படும் பண நடமாட்ட அறிக்கை ஆகியவை கணக்கு புத்தகங்களுடன் உடன்படுகின்றன.

(ஈ) எங்கள் கருத்துப்படி, மேற் கூறிய தனித்துவமான நிதி நிலை அறிக்கைகள், நிறுவனங்களின் சட்டத்தின் பிரிவு 133 இன் கீழ் நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகள், 2014 விதி 7 உடன் படிக்கத்தக்க வகையில் கணக்கியல் செந்தர நிலைகளுக்கு இணங்க உள்ளன.

(உ) இயக்குநர்கள் குழுவால் 31 மார்ச், 2022 அன்று பெறப்பட்ட எழுத்துப்பூர்வ பிரதிநிதித்துவங்களின் அடிப்படையில், சட்டத்தின் பிரிவு 164(2)–ன் படி இயக்குநர்கள் எவரும் மார்ச்31, 2022 அன்று இயக்குநராக நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவர் அல்ல.

© நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையிடலுக்கான உள்ளக நிதிநிலைக்கட்டுப்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் அத்தகைய கட்டுப்பாடுகளின் செயல்பாட்டுதிறன் குறித்து, ''இணைப்பு ஆ'' இல் உள்ள எங்களுடைய தனியான அறிக்கையைப் பார்த்திடுக.

(எ) நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள், 2014 இன் விதி 11 ன் படி தணிக்கையாளர்களின் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய பிற செய்திகளைப் பொறுத்த வரை, எங்களுக்கு கொடுக்கப்பட்ட விளக்கங்களின் படியும் எங்கள் கருத்துப்படியுமான எங்களுடைய தகவல்களில்:

(i) நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளின் தாக்கத்தையும் நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது, இதனை அதனுடைய நிதி நிலையை பாதிக்கும் கணக்குகளின் குறிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) முன்கூட்டியே எதிர்பார்க்கக் கூடிய பொருள் இழப்புகள் ஏற்படும் வகையில் வழிவழியாக வரும் ஒப்பந்தங்கள் உட்பட எந்தவொரு நீண்டகால ஒப்பந்தமும் நிறுவனத்திடம் இல்லை.

(iii) நிறுவனத்தில் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு மாற்ற வேண்டிய தொகைகள் எதுவும் நிலுவையில் இல்லை.

(a) நிர்வாகம் தனது அறிவு மற்றும் நம்பிக்கையின் படி, கணக்குகளுக்கு குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படி, எந்த நிதியும் (தனியாகவோ அல்லது மொத்தமாகவோ) முன்பணம் அல்லது கடன் வாங்கப்படவில்லை அல்லது முதலீடு செய்யப்படவில்லை.

(கடன் வாங்கியதில் இருந்து) நிறுவனத்தால் அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் (''இடைத்தரகர்கள்'') உட்பட வேறு எந்த நபர்(கள்) அல்லது நிறுவனத்திற்கு(கள்) நிறுவனத்தால் பிரீமியம் அல்லது பிற ஆதாரங்கள் அல்லது நிதிகள் பங்கு, இடைத்தரகர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது நிறுவனத்தின் சார்பாக (''இறுதி பயனாளிகள்'') அடையாளம் காணப்பட்ட பிறநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தாலும் அல்லது முதலீடு செய்தாலும் அல்லது அதன்சார்பாக ஏதேனும் உத்தரவாதம், பாதுகாப்பு ஏதும் இறுதி பயனாளிகளுக்கு அளிக்கவில்லை.

(b) நிர்வாகம் தனது அறிவு மற்றும் நம்பிக்கையின் படி, கணக்குகளுக்கான குறிப்புகளில் Sவெளிப்படுத்தப்பட்டுள்ள படி, எந்தவொரு நபரிடமிருந்தும் எந்த நிதியும் (தனியாகவோ அல்லது மொத்தமாகவோ) நிறுவனத்தால் பெறப்படவில்லை (நிறுவனம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, எந்தவிதத்திலும் அடையாளம் காணப்பட்ட பிற நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கடன்கொடுக்க வேண்டும் அல்லது முதலீடு செய்ய வேண்டும் என்று எழுத்து மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ பதிவு செய்திருந்தாலும், வெளிநாட்டு நிறுவனங்கள் (“நிதிக்தரப்புகள்”) உட்பட, அல்லது நிறுவனம்(கள்) நிதியளிப்புக் தரப்பு (“இறுதிப்பயனாளிகள்”) மூலமாக அல்லது சார்பாக அல்லது இறுதிப் பயனாளிகள் சார்பாக ஏதேனும் உத்தரவாதம், பாதுகாப்பு அல்லது போன்றவற்றை வழங்கவில்லை.

(c) தணிக்கை நடைமுறைகளின் அடிப்படையில் நியாயமானதாகவும் பொருத்தமானதாகவும், சூழ்நிலைகளுக்கேற்பவும் கருதப்பட்டது., எங்கள் தணிக்கை துணைப் பிரிவு(i) மற்றும்(ii) இன் கீழ், மேலே(a) மற்றும் (b) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள விதி 11e இன் உள்ள பிரதிநிதித்துவங்கள் ஏதேனும் தவறான அறிக்கையைக் கொண்டிருப்பதாக எங்கள் கவனத்திற்கு வரவில்லை.

(iv) நிறுவனம் இந்த ஆண்டில் எந்த ஈவுத்தொகையையும் அறிவிக்கவோ அல்லது செலுத்தவோ இல்லை மற்றும் ஆண்டிற்கான இறுதி ஈவுத்தொகையை முன் மொழியவில்லை.

(iv) எங்கள் தேர்வின் அடிப்படையில், சோதனை சோதனைகள் அடங்கும், நிதியாண்டிற்கான கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்க நிறுவனம் மார்ச் 31, 2025 அன்றைய நிலவரப் படி கணக்கியல் மென் பொருளைப் பயன்படுத்தியுள்ளது.

பதிவு தணிக்கை பாதை (திருத்து பதிவு) வசதியின் அம்சம் உள்ளது, ஆனால் மென்பொருளில் பதிவு செடீநுயப்பட்ட அனைத்து தொடர்புடையபரிவர்த் தனைகளுக்கும் இது ஆண்டு முழுவதும் செயல்படுத்தப்படவில்லை

இடம்: சென்னை
தேதி: 20.06.2025

எங்கள் அறிக்கையின்படி
**திருவாளர்கள் தசரதன் & கோ**
பட்டயக்கணக்காளர்கள்
(பதிவு எண். 000688S)
**K. ராதா கிருஷ்ணன்**
பங்குதாரர் (உறுப்பினர் எண். 027131)
UDIN:25027131BMJLWD9368

# இணைப்பு ‘அ’

நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 143 இன் துணைப் பிரிவு (11) இன் அடிப்படையில் இந்திய மத்திய அரசால் வெளியிடப் பட்ட நிறுவனங்கள் (தணிக்கையாளர் அறிக்கை) ஆணை 2020 (“ஆணை”) இன் பத்திகள் 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் குறித்த அறிக்கை.

(i) (அ) ஆலை தனது சொத்து மற்றும் ஆலையின் இயந்திர தள வாடங்கள் மற்றும் உபகரணங்களின் முழு விவரங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்களை முறையாக பராமரிக்கவில்லை.

(ஆ) சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் தொட்டு பார்த்து (உடல் ரீதியாக) சரிபார்க்கப்பட்டன; நிலையான சொத்துகளின் பதிவேடு முழுமையடையாமல் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இல்லாமல் இருந்தாலும், அதனால், ஏதும் முரண்பாடுகள் தெரியவில்லை.

(இ) இந்நிறுவனத்திற்கு அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை.

(ஈ) நிறுவனம் 133 ஏக்கர் நிலத்தை அரசு ஆணை மூலம் கையகப்படுத்தியுள்ளது. ஆனால், அதற்கான உரிமைப் பத்திரங்கள் எதுவும் இல்லை.

(உ) நிறுவனம் அதன் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் (பயன்பாட்டில் உள்ள சொத்துக்கள் உட்பட) அல்லது பிற அழியாத சொத்துக்கள் ஆகிய இரண்டையுமே, இவ்வாண்டில் மறு மதிப்பீடு செய்யவில்லை.

(ஊ) பினாமி பரிவர்த்தனைகள் (தடுப்பு) சட்டம், 1988 (1988 இன் 45) மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் எந்தவொரு பினாமி சொத்தையும் வைத்திருக்கும் நிறுவனத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையும் தொடங்கப்படவில்லை அல்லது நிலுவையில் இல்லை.

(ii) (அ) நிர்வாகத்தால், நடப்பு நிதியாண்டில் சரக்குகளின் இருப்பு விவரங்கள் ஆண்டு முழுவதும் எண்ணி சரிபார்க்கப்படவில்லை. எங்களிடம் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சரக்குகள் ஆண்டு இறுதியில் நிர்வாகத்தால் உடல் ரீதியாக சரிபார்க்கப்பட்டன. ஆண்டு இறுதி சரிபார்ப்பு அறிக்கைகளைத்தவிர, எங்களுக்காக எந்தப் பொருட்களும் தயாரிக்கப்படவில்லை மற்றும் நியாயமான தன்மையை நாங்கள் தெரிவிக்கவில்லை. எங்கள் கருத்து மற்றும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கத்தின் படி, ஆண்டு இறுதிப் சரக்குகளின் சரிபார்ப்பு எந்த முரண்பாடுகளும் கவனிக்கப்படவில்லை.

(ஆ) ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் அனுமதிக்கப்பட்ட செயல்பாட்டு மூல தன வரம்புகளுக்கு நிறுவனம் வங்கிகளிடம் தாக்கல் செய்யும் காலாண்டு அறிக்கைகள்/அறிக்கைகள் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் ஒப்பந்தம் ஆகியுள்ளது.

(iii) நடப்பாண்டில் நிறுவனம் எந்த முதலீடும் செய்யவில்லை, மேலும், கடன் (ம) முன்பணங்களின் மீதான எந்த உத்தரவாதம் அல்லது பாதுகாப்பு எதையும் எவருக்கும் வழங்கவில்லை.

(iv) எங்களின் கருத்து மற்றும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின் படி, நிறுவனம் எந்தவொரு கடனையும் வழங்கவில்லை அல்லது நிறுவனத்தின் எந்த இயக்குநருக்கும் உத்தரவாதம் அல்லது பாதுகாப்பை வழங்கவில்லை, எனவே சட்டத்தின் பிரிவு 185 இன் விதிகள் பொருந்தாது. நிறுவனம்,. பொருந்தக் கூடிய பிரிவு 186 இன் விதிமுறைக்கு (நிறுவன) இணங்கியுள்ளது.

(v) நிறுவனம் எந்தவொரு வைப்புத் தொகையையும் ஏற்கவில்லை, இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட உத்தரவுகள் மற்றும் பிரிவுகள் 73 முதல் 76 வரையிலான விதிகள் அல்லது நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் ஆகியவை இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

(vi) நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 148 இன் துணைப் பிரிவு (1) இன் கீழ் மத்திய அரசால் அடக்க விலை கணக்கு பதிவுகளை பராமரித்தல் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இது போன்ற கணக்குகளையும் பதிவுகளையும் இந்நிறுவனம் பராமரித்து வருகிறது.

(vii) (அ) வருங்கால வைப்பு நிதி, ஊழியர்களின் வைப்பு நிதி, காப்பீடு, வருமான வரி, விற்பனை வரி, சேவை வரி, சுங்க வரி, கலால் வரி, மதிப்பு கூட்டப் பட்ட வரி, செஸ் மற்றும் இது போன்ற ஏதேனும் உள்ளிட்ட மறுக்க முடியாத சட்ட ரீதியான தொகைகளை நிறுவனம் குறிப்பிட்ட காலத்தில் வழக்கமாக செலுத்தி வருகின்றது. பிற சட்ட ரீதியான

பொருத்தமான நிலுவைத் தொகை. சம்பந்தப் பட்ட நிதியாண்டின் கடைசி நாளில் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைகளை, செலுத்த வேண்டிய நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ளவை என எதுவும் இல்லை.

(ஆ) வருமான வரி அல்லது விற்பனை வரி அல்லது சேவை வரி அல்லது சுங்கவரி அல்லது கலால் வரி அல்லது மதிப்பு கூட்டப்பட்ட வரி ஆகியவை சர்ச்சையின் காரணமாக செலுத்தப்படாதவை பின் வருமாறு:

| வழக்கு நிலுவை விவரம் | வரி விவரம் | வழக்கு மன்றத்தின் பெயர் | காலம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| வணிக வரி (கொள்முதல் வரி) சட்டம் 1956 | விற்பனை / கொள்முதல் வரி | STAT, மதுரை | 1992–1993 | 1.61 |
| தமிழ்நாடு வணி கவரி சட்டம் 1959 | விற்பனை / கொள்முதல் வரி | STAT, மதுரை | 1995–1996 | 234.28 |
| மத்திய வணிக வரி சட்டம் 1956 | விற்பனை / கொள்முதல் வரி | STAT, மதுரை | 2007–2008 | 12.12 |
| மத்திய வணிக வரி சட்டம் 1956 | விற்பனை / கொள்முதல் வரி | STAT, மதுரை | 2009–2010 | 3.57 |
| வருமான வரி | வருமான வரி | மேல்முறையீட்டிற்கு தீர்மான அலுவலர் ஆணை பிறப்பித்துள்ளார் | 2010–2011 | 99.77 |

(viii) வருமானவரிச் சட்டம், 1961 (43 இன் 1961) இன் கீழ்ந வரி மதிப்பீடுகளில் ஆண்டு வருமானமாக கணக்குப்புத் தகங்களில் பதிவு செய்யப்படாத எந்தப் பரிவர்த்தனைகளையும் நிறுவனம் சரணடையவோ அல்லது வெளிப்படுத்தவோ இல்லை.

(ix) (a ) கடன்களை திருப்பிச் செலுத்துவதில் அல்லது தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதில் இந்நிறுவனம் தவறிவிட்டது அவை பின்வருமாறு:

| கடன் விவரம் | கடன் வழங்கியோரின் பெயர் | நிலுவையிலுள்ள அசல் (ரூ) | நிலுவையிலுள்ள வட்டி (ரூ) | கெடு தேதி |
|---|---|---|---|---|
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 22,61,50,000 | 16,49,37,814 | 31/3/2019 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 18,50,000 | 12,45,836 | 31/3/2019 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 8,68,85,476 | 6,42,39,354 | 31/3/2019 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 16,64,90,000 | 8,49,46,231 | 31/3/2020 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 25,09,000 | 13,09,442 | 31/3/2020 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 3,96,97,000 | 2,00,42,498 | 31/3/2020 நாளன்று உள்ளவாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 25,00,000 | 9,15,712 | 31/3/2021 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 6,11,99,500 | 2,17,02,854 | 31/3/2021 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 6,11,99,500 | 2,04,54,048 | 31/3/2021 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 8,60,53,000 | 2,85,41,069 | 31/3/2021 நாளன்று உள்ளவாறு |
| குறுகிய காலகடன் | வழிவகை கடன்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டது | 19,50,57,000 | 4,39,34,852 | 31/3/2022 நாளன்று உள்ளவாறு |
